www.tamiltime.eu

# தமிழ் ரைம்
# TAMIL TIME

10

ஐரோப்பிய பதிப்பு

மாதாந்த இலவச வெளியீடு May-2016

MAY

வரலாற்றுத் தொடர்- ப.7
இது ஒரு அதிசயம் தானே- ப.13
மே தினம்- ப.16
கவிச்சாரல்கள்- ப.18
விளையாட்டில் போதை-ப.24
நாமும் நலவாழ்வும்- ப.25
அறிவுப்புதிர்- ப.26

மருத்துவ ஆலோசனை

**நாமும் நலவாழ்வும்**

வைத்திய கலாநிதி டாக்டர். ஆனந்தி



சரத்பொன்சேகாவின் சாட்சியம் ஏற்கப்படுமா? ப.4



உடல் ஊனம் ஒரு தடையா! ப.12

**MAY 18** ப.17





விஜயகாந் ஒரு கிங் ப.6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lebara play

150 க்கும் மேற்பட்ட டிவி அலைவரிசைகள், 3000திற்கும் மேற்பட்ட திரைப்படங்கள்

99€

KERVEN GMBH
Rheinische Str.64 Dortmund : DE
www.keerven-Gmbh.com
E-Mail:info@kerven-Gmbh.com
Germany Tel :0231 17721820 Mob: 0151 25406191
France Tel: 09 77 18 59 11 Mob: 0754 11 20 20
UK : 0208 123 7558 Mob: 075 34 037 670



மற்றுமொரு அறிமுகம்
துரித பணமாற்றுச்சேவை

TEMPO MONEY TRANSFER
only 4€
Günstige und Schnelle Geldtransfer

அன்பான வாடிக்கையாளர்களே........

நீங்கள் பெற்றுக்கொள்ளும் Lebara play யுடன் பற்றுச்சீட்டையும் பெற்றுக்கொள்ளுங்கள். பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள தவறும் பட்சத்தில் உங்கள் Lebary play set top box இல் ஏற்படும் தொழில்நுட்பப் பிரச்சனைகளுக்கோ அல்லது சேவைகளுக்கான தடங்கல்களுக்கோ உத்தரவாதம் கிடையாது.
ஆகவே வாடிக்கையாளர்களே நீங்கள் Lebara play set top box வாங்கும்போது உங்களுக்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

குறிப்பு!!
போலியான முகவர்களிடம் வாங்கி ஏமாறாதீர்கள்.

ANDROID APP ON Google play


100% LEGAL

HD/SD QUALITY

Miss it? Love it? Play it?

TV

முழுமையான கால வரைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் மேலும் தகவல்களை அறிவதற்கும் lebera.com/play/terms-conditions என்ற வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்



Ayurveda Praxis

ஆயுள்வேத வைத்திய நிலையம்

வைத்திய கலாநிதி டாக்டர் ஆனந்தி

**பஞ்ச ரோக வஸ்தி**

பஞ்ச ரோக வஸ்தி எனப்படுவது நம் உடலில் முக்கிய உறுப்புக்களான குடல், ஈரல், கல்லீரல், நுரையீரல் மற்றும் சிறுநீரகம் ஆகியவற்றில் உள்ள எல்லா அசுத்தங்களையும், கழிவுகள் மற்றும் கொழுப்புக்களையும் எந்த ஒரு பக்கவிளைவுமின்றி ஆயுள்வேத / சித்தமுறைப்படி சுத்திகரிக்கப்படும் ஓர் மென்மையான வைத்தியம்.

**இதன் உடன் பயன்.**

- உடல் எடை 3—5 கிலோ வரை உடனடியாகக் குறையும்
- மூட்டுவலியிலிருந்து நிவாரணம்.
- மலச்சிக்கல், தலையிடி, வயிற்றுப்பிரச்சனைகள், தோல் பிரச்சனைகள் மற்றும் பல.....

உங்கள் உடம்பை உற்சாகமாகவும் களைப்பு நீங்கி பலம்பெறச் செய்யவும் உங்களுக்கு உடனே தேவை பஞ்ச ரோக வஸ்தி

கடந்த பதினெட்டு (18) வருட காலமாக ஆயுள்வேத / சித்த வைத்தியத்தில் நிபுணத்துவம் பெற்ற, வைத்திய கலாநிதி டாக்டர் ஆனந்தி அவர்கள் தங்கள் குழுமத்துடன் நடாத்திவரும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற வைத்திய நிலையம்.

அனைத்து விதமான நோய்களுக்கும் வைத்தியம் செய்யப்படும்.

Ayurveda Praxis
Am Baumrain 6
57319 Bad Berleburg.
Tel.- 02751 427 9575,
Mobile.- 0175 75 85 952 .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ரைம்
## TAMIL TIME



பிரதம ஆசிரியர்
Chief Editor
செ. தவா

துணை ஆசிரியர்
க. சுப்பிரமணியம்

பதிப்பு ஆசிரியர்
த. கோபி

ஆசிரியர் குழு
சு. பாக்கியநாதன்
க. சுப்பிரமணியம்
செ. தவா
த. கோபிநாத்

வெளியீடு
Publisher
த. கோபிநாத்
Gothab Finance
Rheinische str 72
44137 Dortmund
Tel.-+49(0) 231 53375365
Mobile.-+49(0) 15253961138
Email.- gt@tamiltime.eu
gt@gothab.com
oviyan@msn.com

விளம்பரத்தொடர்பு
சந்தைப்படுத்தல்
வடிவமைப்பு
Advertisement
Marketting
Layout
nr.jth
Mobile:- +49 (0) 1782090865
Advert@tamiltime.eu

செய்தித் தொடர்புகளுக்கு
Mobile:- +49 (0) 1782090865
news@tamiltime.eu

வாசகர் கருத்து
Mobile:- +49 (0) 1782090865
Admin@tamiltime.eu

அன்பான வாசகர்களே!

தமிழ்ரைம் 10வது இதழ் உங்கள் கரங்களில் இருக்கும் இம்மாதத்தினை தமிழ் மக்கள் எவரும் மறக்கமாட்டார்கள். காரணம் இலங்கை வரலாற்றில் பாரிய தமிழ் இனப்படுகொலை இந்த மாதத்தில்தான் நடந்தேறியது. இதனை ஐ.நா, சபையோ வேறெந்த உலக நாடுகளோ தடுத்து நிறுத்த முன்வரவில்லை. அதே வேளை அருகில் இருந்த காந்தியம் பேசும் இந்திய நாடும் மௌனமாகவே இருந்து இப்படுகொலைக்கு உதவியதாகவே கருதப்படுகிறது.

படுகொலை நடைபெறும்வரை மௌனம் காத்த நாடுகள், இலங்கை அரசாங்கம் தங்களுக்கு சார்பில்லாத கொள்கையைக் கடைப்பிடித்த காரணத்தால் தமிழினப் படுகொலைகளைக் கண்டித்து சத்தம் போட்டன. ஆனால் இப்பொழுது இலங்கையி ல் புதிய அரசாங்கம் ஏற்பட்டு, அது தங்கள் சார்பாக நடப்பதாகக் காட்டுவதால் அதை நம்பி, மீண்டும் மௌன நிலைக்குச் சென்றுவிட்டன. இதனால் தமிழினப்படு கொலைக்கு நீதி கிடைப்பதற்கோ தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு கிடைப்பதற்கோ வாய்ப்புக் காணப்படவில்லை.

இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட்டதால் தமிழ் மக்கள் பலம் வாயந்த சக்தியை இழந்துவிட்டார்கள். அதனால், இப்போது மீண்டும் நாற்பது வருடங்கள் பின்னோக்கிச் சென்று, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தூக்கிப் பிடிக்கின்றார்கள். அதைக்கூட எல்லோரும் ஒருமித்துச் செய்வதாக இல்லை. ஒருசில குழுக்களே அதைப்பற்றிப் பேசுகின்றன.

இதே வேளை தமிழினப்படுகொலை நடைபெற்றபோது நாடகமாடிய தமிழக அரசியல்வாதிகளும். இலங்கைத் தமிழ்மக்களை பேசுபொருளாகவே கொண்டுள்ளார்கள்.

இவற்றையெல்லம் நோக்கும்போது இலங்கைத் தமிழ் மக்கள் எல்லோரும் பகடைக்காயாகிவிட்டார்களா என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

தமிழினப் படுகொலையினால் உயிர் நீத்த அனைத்து மக்களினதும் போராளிகளினதும் ஆத்ம சாந்திக்காக நாமும் பிராத்திக்கின்றோம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

ஆசிரியர்

தமிழ்ரைம் சஞ்சிகையில் பலதரப்பட்ட படைப்பாளிகளின் ஆக்கங்கள் இடம்பெறுகின்றது.. எனவே பிரசுரமாகும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே முழுப்பொறுப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்



வள்ளுவர் வாக்கு

திருக்குறள்

" பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. " குறள் (152)

பொருள்

பிறர் செய்த குற்றத்தினை எப்போதும் பொறுத்துக் கொள்ளுதல் நல்லதாகும். அக்குற்றத்தினை மறந்துவிடுதல் அப்பொறுமையினையும் விடச் சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத்பொன்சேகாவின் சாட்சியம் ஏற்கப்படுமா?

தென் இலங்கையின் தற்போதைய அரசியலில் தவிர்க்கமுடியாத ஒரு நபராக சரத்பொன்சேகா அவர்கள் குரல் கொடுத்துக்கொண்டிருப்பது அனைவரையும் புருவம் உயர்த்த வைத்துள்ளது. இது அவரே திட்டமிட்டுச் செய்யும் பரப்புரையா? அல்லது புறச்சூழல் ஏற்படுத்தும் வாதப் பிரதிவாதங்களா? என்பது சற்று கவனிக்கவே வைக்கின்றது.

அதிலும் குறிப்பாக ஆயுதப் போராட்டம் முடிவுற்று ஆறுவருடங்களின் பின்னர் அவர் சாட்சியாக மாறி, நடந்த சம்பவங்கள் பற்றி தெரிவிக்கும் கருத்துகள் அனைத்தும், அவரும் குழம்பி அடுத்தவர்களையும் குழப்பும் செயலோ என்ற கோணத்தில் சிந்திப் பதும் தவிர்க்கமுடியாததாகவே இருக்கின்றது. ஏனெனில் அவர் வெளியிடும் சாட்சியக் கருத்துக்கள் மிக முக்கியமானத இருந்தும் இதுநாள்வரை புறந்தள்ளப்பட்டு வரும் காரணத்தால்!

ஆயுதப்போராட்டம் இறுதிக்கட்டத்தை நெருங்கியபோது இலங்கையின் இராணுவத் தளபதி என்ற வகையில் யுத்தத்தின்போது நடைபெற்ற சம்பவங்கள் அனைத்துக்கும் அவரே பொறுப்புக் கூறியிருக்க வேண்டும். ஆனால் யுத்தம் நடைபெற்றபோது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்சவும் பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய அவர்களும் களமுனையில் இருந்த இராணுவத் தளபதிகளுடன் நேரடியாகத் தொடர்புகளை மேற்கொண்டு கட்டளைகளைப் பிறப்பித்ததாக இராணுவத்தளபதியே தெரியப்படுத்துவதால்யுத்தக் குற்றத்தை செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்களா? என்ற கேள்விதான் எமக்குள் எழுகின்றது.

இந்த நிலையில் சரத் பொன்சேகா அவர்கள் தெரிவித்து வரும் சில தகவல்களை நோக்குவோம்.. „யாரை கொலை செய்தாவது போரை முடி“ என மஹிந்த ராஜபக்ச தெரிவித்த போதிலும் 2 இலட்சம் மக்களை பாதுகாப்பாக மீட்டெடுக்கும் சவாலில் களமிறங்கினோம். ஆனால் போர் வெற்றியை தனதாக்கிக் கொள்வதற்காக என்னையும் மீறி கனிஸ்ட நிலை அதிகாரிகளுக்கு பாதுகாப்பு செயலாளர் கட்டளையிட்டார். இதனால் தான் போர்குற்றப் பிரச்சனைகளும் வெள்ளைக் கொடி விவகாரமும் ஏற்பட்டது என வீரகேசரி நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலும், வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தளபதிகள் எவரும் படையினரிடம் சரணடைய வில்லை எனவும், இறுதி யுத்தத்தில் 23,000 புலிகள் கொல்லப்பட்டனர். அவற்றுக்குள் இந்த காணாமல் போனவர்கள் என்று சொல்லப் படுபவர்களும் உள்ளடங்கி இருக்கலாம் என யாழ் ஊடக மையத்தில் 03.04.16 அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டிலும்,

கடந்த 2009 மே 16-ம் தேதி வெளிநாட்டில் இருந்துதாய் நாட்டுக்கு திரும்பிய மஹிந்த ராஜபக்ச மண்ணை முத்தமிட்டார். அன்று போர் முடியவில்லை. இராணுவ தலைமைத் தளபதியான எனக்கு 18-ம் தேதி பதவி உயர்வு வழங்கினார். அன்றும் போர் நிறைவடையவில்லை.

மே 19-ம் தேதி போர் முடிந்து விட்டதாக நாடாளுமன்றத்தில் ராஜபக்ச அதிகார பூர்வமாக அறிவித்தார். அன்றைய தினமும் போர் முழுமை யாக நிறைவடய வில்லை. அப்போது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன்



உயிருடன் இருந்தார் என 10.03.16 அன்று இலங்கை நாடாளு மன்றத்தில் உரையாற்றிய போதும், முன்னாள் இராணுவ தளபதியான சரத் பொன்சேகா தனது சாட்சியங்காளகப் பதிவு செய்துவருகின்றார்.

அத்துடன் அமைச்சராகிய பின்னர் மார்ச் மாதம் 10ம் திகதி, இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து. சர்வ தேச விசாரணை நடத்த வலியுறுத்துவது வரவேற்கத்தக்கது என்றும் சர்வதேச விசாரணையைக் கண்டு அஞ்ச வேண்டிய அவசியம் இலங்கைக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, இலங்கை யின் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே, சரணடைய வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மூன்று முக்கிய தலைவர்களையும் சுட்டுக்கொல்லுமாறு உத்தரவிட்டதாகவும்.

இதன்படி கடந்த மே மாதம் 17 ஆம் திகதி, அதிகாலை, இந்த மூன்று தலைவர்களும் தமது குடும்பத்தினருடன் பசில் ராஜபக்ச மற்றும் வெளிநாட்டு தரப்பு ஆலோசனையின்படி வெள்ளையாடை அணிந்து சரணடைவதற்காக வந்துள்ளனர். இதன் போதே கோத்தபாய ராஜபக்ச, 58வது படையணித்தளபதியாக இருக்கும் சவேந்திர சில்வா வுக்கு எந்த ஒரு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் சரணடைய அனுமதிக்க வேண்டாம், அவர்களை சுட்டுக்கொல்லுமாறு உத்தரவிட்டுள்ளதாகவும்



இதன்படியே குறித்த தலைவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். எனினும் அரசாங்கம் மே 18 ஆம் திகதி மோதல் ஒன்றின் போது நடேசன், புலித் தேவன் மற்றும் ரமேஸ் ஆகியோர் கொல்லப்பட்டதாக அறிவித்திருந்தது. இந்த சம்பவம் தமிழீழ விடுதலைப்புலிகள் வெள்ளை முள்ளிவாய்க்காலில் 100க்கு 100 மீற்றர் பிரதேசத்திற்குள் அகப்பட்டிருந்தபோதே இடம் பெற்றது என 2009ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் திகதியே, ஆங் கில ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் சரத்பொன்ளசேகா தெரிவித்துவிட்டார்.

இப்படி நடைபெற்ற இறுதி யுத்தக்களத்தின் முக்கிய சாட்சியாக இருக்கும் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா அவர்கள் தன்னையும் தனது இராணுவச் செயற்பாடுகளையும் நியாயப்படுத்தினாலும், அவர் ஆதாரபூர்வமாகத் தெரிவிக்கும் தகவல்களுக்கு இதுவரை எந்தவித நடவடிக்கையும் அரசால் மேற்கொள்ளப்பட வில்லை. அதற்கான எந்தவித அறிகுறிகளும் தென்படவுமில்லை.

இறுதியுத்தத்தின்போது அங்கிருந்த பொதுமக்கள் அனைவருடனும் ஐ.நா சபையின் மனித உரிமைகள் சபை வரையிலும் யுத்தக் குற்றங்கள் நடைபெற்றுள்ளது என்பதை ஆதாரங்களுடன் தெரிவிக்கின்ற போதும், அதற்கான விசாரணைகளைக் கோரிய போதும், நாங்கள் நல்லாட்சியாளர்கள் என்று ஆட்சி செய்பவர்கள் நீதியைப் பெற்றுக்கொ டுக்க வேண்டிய நிலையில், அவர்களே காலத்தை இழுத்தடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைக் காப்பாற்றும்போது, சரத்பொன்சேகாவும் அரசியல்வாதியா மாறியுள்ளதால் யுத்தக்குற்றவாழி யார் என்று இனங்காணப்படுவதும் தண்டிக்கப்படுவதும் சாத்தியமாகுமா?

தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் தனி ஈழக் கனவு தோல்வியடைவில்லை.

அரச தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது, 2009ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதியன்று யுத்த ரீதியில் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும், எமது பாதுகாப்புப் படைகளிடம் யுத்த ரீதியில் தோல்வி கண்டபோதும், ஈழத்-துக்கான கனவை காணும் புலிகளின் கொள்கை இன்னும் தோல்வியடை வில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்தோடு, யுத்தம் நிகழ்ந்த காலகட்டத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டன என்ற குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து தப்பி வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த குழுவினர்கள் பல வழிகளிலும் சர்வதேசமயப்படுத்தினர்.



படைவீரர்களுக்குப் பங்கம் விளைவிக்கப்படுகிறது என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால், சர்வதேச ரீதியில் எமது நாட்டுக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க வேண்டுமாயின், எமது நாட்டின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு உரிய முறை யில் விசாரணைகள் நடா-த்தப்பட்டு, உண்மையை வெளிப்படுத்தி அக்குற்றச் சாட்டுகளிலிருந்து மீளவே-ண்டும்.

யுத்தகாலம் தொடர்பாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் காரண-மாக எமது படையினர் எத்தனை பயிற்சி வாய்ப்புகளை இழக்க நேரிட்டது. பல தசாப்தங்களாக அமெரிக்காவால் எமது படையினருக்கு வழங்கப்பட்டு வந்த பயிற்சியினை இழக்க நேரிட்டது.

இந்தியா உட்பட இன்னும் பல நாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற பல பயிற்சிகளை இழக்க நேர்ந்தது.

விசாரணை முன்னோக்கிச் செல்லும் போதே, அச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற வகையில் படையினர் சிலர் மீது விசாரணை மேற்கொள்ள வேண்டி வந்துள்ளது. விசாரணை முடிவில் அப்படைவீரர்கள் குற்றவாளிகளா, நிரபராதிகளா என்பது நிரூபணமாகும்.

இவ்வாறான சம்பவங்கள் பற்றி நியாயமான விசாரணைகளைக் கோரும் உள்நாட்டுக்கும் வெளிநாட்டுக்கும் பதிலளிக்க வேண்டியது, அரசின் கடமையாகும். அவ்வாறு பதிலளிப்பதன் மூலம், களங்கமற்ற தன்மையை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமே, ஒரு நாடு என்ற வகையில் எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியும்..

26 வருடங்களுக்கு அதிகமாக யுத்தத்துக்கு முகம்கொடுத்து வந்திருப்ப-துடன், பெரும்பாலும் யுத்த வெற்றி பற்றியே கதைத்தும் வருகின்றோம். யுத்தம் ஏற்படக் காரணம் என்ன என்பது பற்றி, இதுவரை ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் சரியாக ஆராய்ந்து,அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை என்றே நான் கருதுகின்றேன்.

இனங்களுக்கிடையே நல்லுறவும் நல்லிணக்கமும் ஏற்படாவிடின், அதுவே பிரச்சி னையாக அமைகின்றது. 2009ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி புலிகள் அமைப்பு, யுத்த ரீதியில் தோற்கடிக்கப்பட்டது.

அவ்வாறு எமது பாதுகாப்புப் படைகளிடம் யுத்த ரீதியில் தோல்வி கண்ட போதும், யுத்தக் களத்திலிருந்த பயங்கரவா-திகளின் உயிர்கள் மடிந்த போதும், ஈழத்துக்கான கனவைக் காணும் புலிகளின் கொள்கை தோல்வியடையவில்லை என்பதை நான் உணர்கின்றேன்.

இந்நிலைமையை, நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேற்கூறிய புலிகளின் தனிஈழத்துக்கான கருத்து என்பதை, துப்பாக்கிக் குண்டுகள், எறிகணைகள் மூலம் தோல்வியடையச் செய்ய முடியாத ஒன்றாகும்.

தனிநாட்டுக்கான கோரிக்கையைச் செயலிழக்கச் செய்ய வேண்டுமாயின், இந்நாட்டில் இனங்களுக் கிடையே ஒற்று மையையும் நல்லிணக்கத் தையும் ஏற்படுத்த வேண்டும்.

அந்த வகையில், இன ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவ-தற்காக நாம் எடுத்து வரும் முயற்சிகளைத் தடுக்கவோ, நாம் இந்த நாட்டை தாரைவார்த்துக் கொடுக்கின்றோம் என்பவர்களோ, நாட்டைப் பலவீனப்படு-த்துகின்றோம் என்று கூறுபவர்களோ, மீண்டும் இந்த நாட்டில் ஒரு யுத்-தம் ஏற்படாதிருக்க தாம் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் என்ன என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று செவ்வியில் தெரிவித்துள்ளார்

---



கனடா, டோரன்டோ யோர்க் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதி-தியாக கலந்துக்கொண்டு உரையாற்றிய ஐக்கிய நாடுகளின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்கள் இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகள் தொடர்பில் தாம் ஒரு வருடத்திற்கு முன்னரே அறிந்திருந்ததாக தெரிவித்துள்ளார். மேலும் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தமக்கு முன்னதாகவே அறிவித்திருந்ததாகவும்.

ஆனாலும் இலங்கையில் தொடரும் பயங்கரவாதத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்காக தாம் பாரிய யுத்தமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக 2008ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தமக்கு சுட்டிக்காட்டியதனால் தான் மஹிந்த ராஜபக்ஸவை கண்டிக்கவில்லை என ஐக்கிய நாடுகளின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை மேலும் தெரிவித்துள்ளார்.


RAJU PARCEL SERVICE

ராஜு பொதிகள் சேவை

கொழும்பு €40

யாழ்ப்பாணம் + கிளிநொச்சி
வவுனியா + முல்லைத்தீவு
திருகோணமலை + மட்டக்களப்பு
கம்பஹா + புத்தளம்
மன்னார் + சிலாபம்
மாத்தளை
€55

மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கும்

உங்கள் பொதிகள் காப்புறுதிடன்.




+ பொதிகளை பெற்றுக் கொள்பவர்களிடமிருந்து எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
+ நீங்கள் அனுப்பும் பொருட்களைப் பெற சுங்க இலாகாவிற்கு அலைய வேண்டியதில்லை.
+ மேலதிக விபரங்களுக்கு இதில் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

கீழ்க்காணும் நாடுகளில் உள்ள அனைத்துத் தமிழர் வர்த்தக நிலையங்களிலும் எமது Box and Packing tape free யாகப் பெற்றுக் கொள்ளலாம்.

+ Germany
+ France
+ Holland
+ Belgium

புதிய ஏஜெண்ட்கள் சேரவிரும்பின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு :
Raju Parcel Service
RPS

DE:0049 (0)163 5065 663
NL:0031 (0)645 664 110


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயகாந் ஒரு கிங்

தமிழக தேர்தல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு இம்முறை மிகப் பெரிய சலசலப்பு ஏற்பட்டுள்ளது என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டிருந் தோம் இன்று மேலும் பரபரப்பாகி பல்வேறு தாவல்களும் தடுமாற்றங்களுமாக அமர்க்களப்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் எதற்காக இந்தப் பரபரப்பு என்பதை மீண்டும் ஒருமுறை நாமும் தேடினோம். அவைபற்றி...

முதலில் இன்றய தமிழ்நாட்டு அரசியல் பரபரப்பில் அடிபடும் பெயர் விஜயகாந் என்ற பெயர் தான். விஜயகாந் அரசியலுக்கு வந்து ஒன்பது வருடம் தான் ஆகின்றது. என்றாலும் அவரின் அரசியல் பிரவேசமும் அது ஏற்படுத்திய அரசியல் அதிர்வுகளும் அதிகம் தான்.

ஏனெனில் அரசியலில் கட்சி ஆரம்பித்தது முதல் யாரோடும் கூட்டு இல்லை என்று அறிவித்துவிட்டு தனி த்து நின்றதுடன், அதிமுகவையும் திமுகவையும் கடுமையாக விமர்சனம் செய்து வந்தார்.



ஆனால் 2012ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தனித்து போட்டியிடாமல் அதிமுக வுடன் கூட்டு சேர்ந்து போட்டியிட்டதுடன். அரசியலிலும் புரட்சிசெய்தார். அந்தத் தேர்தலில் திமுக படுதோல்வியடைந்ததுடன் திமுக அதிமுக என்ற இருமுனைப் போட்டியும் கேள்விக்குறியாகிய நிலையில் விஜயகாந் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்.

தமிழக அரசியலில் அதிமுக திமுக என்ற இரட்டை அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் வருவதையும் மூன்றாவது சக்தியாக விஜய காந்த வருவதையும் திமுக கருணாநியும் அதிமுக ஜெயலலிதாவும் வில்லை. ஏனெனில் தாங்கள் இருவருமே மாறி மாறி ஆட்சிசெய்வதால், தங்கள் இருவருக்கும் மாற்றாக மூன்றாவது சக்தி ஒன்று வருவதை விரும்பவில்லை.

இதனால் விஜயகாந் அவர்கள் இரண்டு பெரிய கட்சிகளுக்கும் பொது எதிரியானார்.

கூட்டணியாக இருந்தும் எதிர்க்கட்சியாக விஜயகாந்த செயற்படுவதையும் வளர்வதையும் முளையியே கிள்ளியெறிய நினைத்த அம்மா எதிர் நடவடிக்கைகளில் இறங்கினார்.

அக்கட்சியின் 9 (ஒன்பது) சட்டமன்ற உறுப்பினர்களை (அருண்பாண்டியன் உட்பட்ட) பிரித்து விஜயகாந்தின் எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பறிக்க முயற்சி செய்தார். அதனால் தமிழ்நாட்டில் எதிர்க்கட்சியே இல்லாமல் ஆட்சி செய்யும் வாய்ப்பையும் ஏற்படுத்த முனைந்தார்.

இதை விஜயகாந்தே எதிர்பார்க்க வில்லை என்பதால் ஆடித்தான் போனார். ஆனாலும் சுதாகரித்துக் கொண்ட விஜய காந் அவர்கள் எதை இழந்தாலும் மன உறுதியை மட்டும் இழக்காமல் தொடர்ந்தும் போராடி அரசியலில் தனக்கென ஒரு இடத்தைத் தக்கவைத்துக் கொண்டதுடன். இரண்டு பெரிய கட்சிகளையுமே எதிர்த்து விமர்சனம் செய்து வந்தார்.



இந்நிலையில் 2016ம் ஆண்டுத் தேர்தலை நோக்கி தமிழ்நாடு நகர்ந்த போது. அறுதிப்பெரும்பாண்மை வென்ற அதிமுக வின் செல்வாக்கு சரிந்த நிலையும் திமுகவின் செல்வாக்கு ஏறு முகத்திலும் சென்றிருந்தாலும் அறுதிப் பெரும்பாண் மையுடன் ஆட்சியமைப்பதற்கு இரு தனிப் பெருங்கட்சிகளாலும் முடியாது என்ற கருத்துக் கணிப்புகள் வெளியாகின.

இந்நிலையில்த்தான் விஜயகாந் அவர்கள் மீண்டும் விஸ்வரூபம் எடுத்தார். ஏனெனில் மூன்றாவது சக்தியாக இருந்த விஜயகாந்தை, அம்மாவால் நெருங்கமுடியாத நிலையில் விஜயகாந்துடன் கூட்டணி அமைத்தால் நாங்கள் ஆட்சி யமைக்கலாம் என்ற நிலை திமுகவுக்கு உருவானது. அதனால்த்தான் பால்ச் செம்புடன் கருனாநிதி பழம் நழுவி விழும் என்று காத்திருந்ததும்.

ஆனால் இரு கட்சிகளுமே தன்னை அழிக்க நினைத்தவர்கள் என்பதால் இவர்களுடன் கூட்டணி வேண்டாம் என்று மக்கள் நலக்கூட்டணியுடன் சென்றார்.

ஆக விஜயகாந் அமைதியாக இருந்தாலும் அவரை முக்கியத்துவப்படுத்தி பிரச்சாரங்களைச் செய்தது ஏனைய கட்சிகள் தான் என்பதால் ஏமாற்றமடைந்த கட்சிகள் விஜயகாந்தின் தேமுதிகாவை பிளவு படுத்தும் வேலைகளை ஆரம்பித்து வெறியடைந் துள்ளார்.

இன்று தேமுதிகவின் கொள்கை பரப்புச் செயலாளர் உட்பட 11 மாவட்டச்செயலாளர்கள் விஜயகாந்திற்கு நிபந்தனை விதித்து திமுகவுடன் கூட்டணி சேர முடிவெடுக்கும் படி 24 மணிநேர காலக் கெடு விதித்தார்கள்.

ஆனால் எதற்கும் அசைந்து கொடுக்காத விஜயகாந் அவர்கள் 11 உறுப்பினர்களையும் கட்சியை விட்டு உடனடியாக நீக்கி அதிரடி முடிவை எடுத்ததுடன் அடுத்தகட்டத்திற்கு நகர்ந்துள்ளார்.

தேமுதிகவின் வாக்கு வங்கி விஜயகாந்திற்கானது என்பதால் விஜயகாந் அவர்கள் கிங்காக உள்ளதாகவே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். யார் என்ன சொன்னாலும் மக்கள் தானே தேர்தலில் முடிவு செய்வார்கள்..

-தம்பி-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்த இனத்தோற்றம்

வரலாற்றுத் தொடர்.......


கடந்தமுறை சுமெரியாவில் வாழ்ந்த தமிழர்கள் பற்றிப் பார்த்திருந்தோம். இம்முறை சுமெரியாவிற்கு வடக்கே குடியேறி வாழ்ந்த தமிழர்களைப் பற்றிப்பார்ப்போம்.

சுமெரியாவிற்கு வடக்கே குடியேறி வாழ்ந்த தழிழர்கள் அக்கத்தியர் (accadians) என்று அழைக்கப்பட்டனர். அக்கத்தியர் எனும் சொல் அந்தப்பக்கத்தில் குடியேறியுள்ளவர்களை குறிக்கும் சொல்லாக வழங்கிருக்கலாம் என்றும் ஆய்வாளர்களால் கருதப்படுகின்றது. பின்னர் சோழ நாட்டினின்றும் சென்ற ஒரு கூட்டத்தினர் அங்கு தங்கி வாழ்ந்துள்ளார்கள்.

அவர்களே அந்நாட்டிற்கு சோழதேசம் என்றும் பெயரிட்டுள்ளனர். அப்பெயரே பிந்நாட்களில் திரிபுற்று சோழதேசம் என்பதே கல்தேயா (Chaldia) வழங்கப்பட்டுள்ளது.

கல்தேயா என்ற (நாடும்) பகுதியும் சுமெரியா என்ற (நாடும்) பகுதியும் ஒருங்கே இணைக்கப்பட்டு பாபிலோனியா என்னும் பெயர் பெற்றுள்ளது.

பாபிலோனியா என்னும் பெயர்பெற்ற நாடு இந்திய மக்களால் பாவேரு என அழைக்கப்பட்டுள்ளது. இந்திய வணிகர்கள் பாவேருவிற்கு கடல்வழியாக சென்று வர்த்தகம் செய்துள்ள வரலாறுகளை பாவேரு சதகம் (கி.மு 500) எனும் நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





பாபிலோனியர்கள் பெரிய கோவிலை அமைத்து, பகற்கடவுளை வழிபட்டார்கள், அங்கே பகற்கடவுளை வழிபட்டதனாலேயே பகற்கடவுளின் வழிபாட்டின்காரணமாக பாபிலோனியா எனும் பெயர் உண்டாகியது. அவர்கள் இடபவாகனத்தின்மீது முத்தலை வேலைப்பிடித்து நிற்கும் தந்தைக்கடவுளையும் சிங்கஊர்தி மேலிருக்கும் தாய்க்கடவுளையும் வழிபட்டுள்ளார்கள். கி.மு ஆறாம் நூற்றாண்டில் பாபிலோனியன் கடைவைத்து வாணிபம் செய்த வ.ரா என்பவரின் கடைக்கணக்குகள் எழுதிய களிமண் ஏடு அங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## ஈராக்கில் முருகனை வழிபடும் யேசிடி இன மக்கள்...

யேசிடி இன மக்கள் இன்றுவரை இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற எந்த மதத்தையும் சாராமல் வாழுபவர்கள் என்பதால் இவர்களின் வரலாறு ஆய்வுகளோடு நோக்கப்படுகின்றது.

இந்தியாவில் இருந்து பத்தாயிரம் மைல் தொலைவில் உள்ள ஈராக்கில் வாழும், யேசிடி மதத்தை பின்பற்றும் மக்கள் மத்தியில், கிட்டத் தட்ட இந்துக்கள் மத்தியில் உள்ள முருகன் புராணக்கதை மாதிரியான புராணக் கதை இருந்து வருகின்றது.

தென்னிந்திய முருகன் வழிபாட்டில் காணப்படும் சேவல், மயிலில் காலின் கீழ் மிதிபடும் பாம்பு ஆகியன, யேசிடி மதத்தவராலும் புனித சின்னங்களாக கருதப்படுகின்றன.மயில் மிகவும் புனிதமாகப் போற்றப்படுகின்றது. இவற்றை நேரில் கண்டறிய விரும்புவோர், வட ஈராக்கில் உள்ள லாலி' எனும் இடத்தில் உள்ள யேசிடி மதத்தவரின் கோயிலுக்கு சென்று இன்றும் பார்க்கலாம்.

குறிப்பு : தற்போது உருவாகியுள்ள இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பான ஐஎஸ்ஐஎஸ் எனும் அமைப்பினர் இஸ்லாமிய தேசம் அமைப்பதாகக் கூறிக்கொண்டு யேசிடி இன பழங்குடியினரை அழித்துவருவதையும் நோக்குக..

இந்த உலகில் முதன் முதலில் எண்ணெய் வளங்களை கண்டறிந்தவர்கள் ஈராக்கியர்கள் என்னும் பண்டைய பாபிலோனியர்கள் ஆவர். இவர்கள் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தங்களது மண்ணில் வானுயர்ந்த கோபுரங்களை கட்டும்போது, கட்டிடத்தின் வலிமையை கருத்தில் கொண்டு கட்டிடத்தின் அஸ்திவாரச்சுவரை (Foundation Wall) நிலத்தில் சற்று ஆழத்திலிருந்து கட்டி எழுப்பினார்கள்.

அப்படி ஒரு சமயம் ஈராக்கிலுள்ள Andericca (Near Babylon Province) என்ற இடத்தில் ஒரு கட்டிடத்தின் கட்டுமானத்திற்க்கா ஆழமாக குழி தோண்டியபோது கிடைத்ததுதான் இந்த கச்சா எண்ணெய் (Crude oil). கச்சா எண்ணெய் சேர்த்து கட்டப்பட்ட சுவர்கள் கறையான்கள், எறும்புகள் மற்றும் பூச்சிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கொள்வதைக் கண்டுபிடித்த பாபிலோனியர்கள், கச்சா எண்ணெய்யை கொதிக்கவைத்து வற்றச்செய்து கிடைத்த கூழ்மத்தை (நிலக்கீழ், Asphalt) நிலத்திற்குள் மறையும் கட்டிடத்தின் அஸ்திவாரச் சுவர்களின் மீது சாயமாக (paint) பூசினார்கள்.

அத்தோடு கச்சா எண்ணையின் எரியும் திறனை கருத்தில் கொண்டு வெளிச்சத்தை உண்டாக்க தீபந்தத்திற்குரிய எண்ணெய்யாகவும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதனை ஹீரோட்டஸ் (Herodus – கி.மு.484) மற்றும் டியோடோரஸ் (Diodorus – கி.மு. 60) என்ற இரு புகழ்பெற்ற கிரேக்க வரலாற்று ஆசிரியர்கள் தங்களது ஆய்வுகட்டுரைகளில் ஆதாரத்துடன் தெரிவிக்கிறார்கள்.

வரலாறு தொடரும்.......

-சுதேசி-

BCN·TRAVELS
Consulting Network
Travels-Business-Worldwide
விமானச்சிட்டைகள் எம்மிடம் சிறப்பு விலையில்...
நம்பிக்கை,நாணயம்,சலுகை யாவும் ஒரே இடத்தில்
உங்கள் உறவுகளுக்கான துரித பணமாற்றுச் சேவை
VALUTRANS
Ria
TEMPO
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
NSB
National Savings Bank
இலங்கை இந்தியா கனடா சிங்கப்பூர் அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உட்பட அனைத்து நாடுகளுக்கும் நீங்கள் பறந்து செல்வதற்க்கான சலுகை விலை விமானச்சிட்டுக்களைப் பெற்றுத்தருகின்றோம். மற்றும் Rail & Fly சேவையுடன் Hotel பதிவுகளையும் மேற்கொண்டு தருகின்றோம்.
2016ம் ஆண்டுக் கோடைக்கால விடுமுறைக்கான முற்பதிவுகளுக்கும் முந்திக்கொள்ளுங்கள்.
Rheinischestr. 72 || 44137 Dortmund || Tel.: 0231/10876361
Öffnungszeiten: Mo-Sa 10:00-19:00 Uhr
Email: bcntravels@hotmail.de, Web: www.bcnugonline.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ யார்? - உனை நீ அறி

கிரேக்க தேசத்தின் மகாஞானி சாக்கிரட்டீஸ் இந்த உலகிற்கு மனதை ஊடறுத்துச் செல்லும் உள ஊடறு சொற்கதிரைச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறான். கிரேக்க தேசத்தின் பரப் பெங்கும் எதிரொலித்த தத்துவச் சொல் அங்கு ஆரம்பித்த அந்த தத்துவ வார்த்தை குணம், ஆற்றல் போன்றவற்றை அறியும் அளவு கோல்தான் அதைக் கைக் கொண்ட ஐரோப்பிய நாடுகள் பாரிய வளர்ச்சியை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதற்குக் காரணமாயின . அதுதான் உனை நீ அறி என்ற சொல்.

உனை நீ அறிந்தால் உலகத்தின் தன்மையை நீ அறிவாய் உனது எண்ணங்களை ஈடேற்ற உன்னால் போராட முடியம் என்பதே அதன் விளக்கம்.

உனை அறி என்றால் என்ன?. நான் யார் என்ற கேள்வியை நான் என்ற ஒவ்வொருவரும் கேட்பதன் மூலமே உனை நீ அறி என்ற அளவு கோலின அர்த்தத்தை அறிந்து கொள்ள முடியும்.

பிரபஞ்சம் எப்படி ஆதியும் அந்தமுமில்லா எல்லைகளற்று இருக்கின்றதோ அது போன்றதுதான் மனித மனம்.

விஸ்வரூபமாக நீயார் என்பது மீண்டும் வந்து நிற்கும். எவனை நோக்கி கேள்வி கேட்கப் படுகின்றதோ அவனின் மனதை அணுக்கதிர்களாக ஊடறுத்துக் கொண்டே இருக்கும்.

அவனின் பெயர், அவனின் ஊர், பெற்றோர்களின் பெயர்கள்,பெற்றோர்களின் ஊர்,அவர்களின்

தொழில்,அவர்களின் பொருளாதார நிலை, அவனின் பொருளாதார நிலை,அவனின் கல்வி நிலை,பெற்றோர்களின் கல்வி



நிலை, அவனின் நாடு நகரம், அவன் என்ன மொழிசார்ந்தவன்,எந்த மதம் சார்ந்தவன் என நீ யார் என்ற கேள்விக்கு பதில்களாக, மறைபொருளாக இருக்கும் மேற்கூறியவை வந்து நின்றாலும் காற்றைப் போல விலக்க முடியாதவாறு மீண்டும் நீ யார் என்பது வந்து நிற்கும்.

நீ நல்லவனா கெட்டவனா, நீ என்னுடன் பேசும் போது நீ இதுவாகத்தான் இருப்பாய் என நம்புகிறேனே உள்ளும் வெளியும் அதுதானா நீ. அப்படியானால் உன்னுடன் நான் பேசும் போது உன் மனம் எல்லைகள் கடந்து செல்லவில்லையா?.

என்னுடன் நீ பேசும் போது உன் மனம் என்ன நிலையில் இருந்தது - இருக்கின்றது - இருக்கும். இவ்வளவுதான் என் மனதின் எல்லை என்று உன்னால் உறுதிபட சொல்ல முடியுமா?. முடியாது முடியவே முடியாது.

நீ என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டு என்னுடன் பேசினாய் அதை யாவதுசொல்ல முடியுமா?. முடியாது.

சரி நீ இதைத்தான் நினைத்தாய் என்று நீ சொல்வதற்கான மன எல்லைக்கப்பால் மனம் செல்லாது நின்ற இடத்திலேயே நிற்கிறதா?.

உனை நீ அறி. உன் மனதை நீ எடை போடு. பிரபஞ்சம் போன்ற மனதை எடை போட முடியுமா?

நீ யார்? நீ உனை அறி - உனை நீ அறி

உனை நீ அறிந்தால் உலகத்தில் போராடலாம்

-ஏலையா க.முருகதாசன்-

நீ யார் என்ற ஒரு கேள் வியை ஒருவனை முன்னிலைப்படுத்திக் கேட்கையில் அவன் பதில் அவன் பெயராகவிருக்கலாம்.
ஆனால் அவன் யார் என்பதற்கு பதில் அல்ல.

இப்படியாக நீ யார் என்ற கேள்வியை தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கையில் அவன் நீ யார் என்ற கேள்வியில் அதன் பதிலாக மறைபொருளாக இருக்கின்ற அவனது பெற்றோரின் பெயரைச் சுட்டித்தான் இக்கேள்வி கேட்கப்படுகின்றதா என அவன் தனது பெற்றோரின் பெயரைச் சொல்வான்.ஆனால் அதுவும் பதில் அல்ல.

அப்படியானால் இதற்கான பதில் என்ன?

உனை நீ அறி என்பதுதான் விடை.

உன் மனதின் ஆழ அகலம் என்ன? அதைச் சொல் என்ற கேள்வி சுட்டுவிரல் நீட்டாது மீண்டும் மீண்டும் வந்து நிற்கும்.

அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் என்பதைக் கடந்து உன் குணங்களை உனை நீ என்ற தராசு எடை போடும்.

தமிழ்ரைம் இதழில் உங்கள் ஆக்கங்களை பிரசுரிக்க விரும்பும் படைப்பாளிகளும், வர்த்தக விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பும் வர்த்தகர்களும். உங்கள் ஆக்கங்களையும், விளம்பரத் தகவல்களையும் ஒவ்வெரு மாதமும் வரும் 15ம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழேந்தல் இரா. நாகலிங்கம் அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவில்

மாமனிதர் தமிழேந்தல் இரா. நாகலிங்கம் ஐயாவின் முதலாவது ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு 27.03.2016 அன்று வூப்பெற்றால் நகரில் வூப்பர் அரங்கில் நினைவு கொள்ளப்பட்டது. மாலை 16.00 மணியளவில் தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பித்த வணக்க நிகழ்வு 21.00 மணியளவில் நிறைவுற்றது.

வணக்க நினைவில் தமிழ்க் கல்விக் கழகத்தின் துறைசார்ந்த பொறுப்பாளர்கள், மாநிலச் செயற்பாட்டாளர்கள், தமிழாலய நிர்வாகிகள், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவிவின் பொறுப்பாளர் உட்பட சில துணை அமைப்புக்களின் பொறுப்பாளர்களும் நினைவுரை வழங்கினார்கள். அத்துடன் மாமனி-தரின் சேவை பற்றிய நாடகமும் அபிநயப் பாடல்களும் இடம்பெற்றன.

யேர்மனியில் தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் எம் இளைய தலை-முறை அந்நிய நாட்டுக் கலாச்சாரத்தில் சிக்குண்டு சீரழியாமல் இருப்ப-தற்காகப் பல தமிழ்ப்பாடசாலைகளை ஆரம்பித்துக் கல்வியுடன், கலை, கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களை அவர்களுக்கு ஊட்டுவதற்காகத் தள்ளாத வயதிலும் தளராத மன உறுதியுடன் தன் துணையுடன் ஓடி ஓடித் தமிழ் வ்ளர்த்த பெரியார் மாமனிதர் இரா. நாகலிங்கம் ஐயா அவர்கள்.

1990 இல் உலகத்தமிழர் இயக்கத்தின் கல்விப் பணிப் பொறுப்பாள ராகத் தன்னை இணைத்து சேவையைாற்றி இறுதியாக 130 தமிழாலயங்களைக் கொண்ட பெருவிருட்சமாகத் தமிழ்க்கல் விக் கழகம் வளர்வதற்கு வித்திட்ட மாமனிதர் ஐயா நாகலிங்கம் என்-பதை யேர்மனியில் தமிழ் வாழும்வரை எவராலும் மறக்கமுடியாது. காகன், கற்றிங்கன், கசிலிங்கவுசன், என்னெப்பெற்றால், விற்றன் எனப் பல தமிழாலயங்களில் தனது துணைவியாருடன் சேர்ந்து சேவையாற்றிய பெருமகன் அவர். கல்விப்பணி தொடர்பாக




பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று இளையோர்களுக்குத் தமிழ் மொழியின் அவசியம் பற்றிச் செயலமர்வுகள் நடாத்திய மா-மனிதர். பொறுமையும், பிறரைமதிக்கும் தன்மையும், அன்போடு செய லாற்றும் திறனும் அவருக்கு நிகர் அவரே.

தமிழீழத் தேசியத் தலைவரால் மதிப்பளிக்கப்பட்ட ஐயா தமிழுக் காகத் தன்னையே அர்பணித்து 16.03.2015 அன்று இவ் உலகை விட்டு மறைந்தார். தமிழ் வாழும்வரை தமிழர் மனதில் அவர் பணி வாழும்.

-செ.தெய்வேந்திரன்-









புகைப்படங்கள் . Nivens Photos




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுகதிர் சஞ்சிகை அறிமுக வெளியீடு



எழுகதிர் எனும் புதிய சஞ்சிகை ஒன்று வூப்பெற்றால் நகரில் 27.03.16 அன்று நடந்த தமிழேந்தல் இரா நாகலிங்கம் ஆசிரியர் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வில், வாகை வெளியீட்டகத்தினரால் அறிமுகப் படுத்தி வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

விடுதலை சார்ந்த செயற்பாடுகளை வெளிக்கொண்டுவருதல். இளம் தலைமுறை யினரை படைப்பாக்கங்களினூடாக ஒருங் கிணைத்தல் ஊக்குவித்தல், புலம்பெயர்ந்த தேசத்து தமிழ்மக்களின் செயற்பாடுகள், சாதனைகள் போன்றவற்றை ஊக்குவித்தல், போன்ற நோக்கங்களோடு, அறிவுப் புதிர்கள், மருத்துவம் உட்பட பொழுதுபோக்கு விடயங்களையும் தாங்கிய இதழாக இந்த எழுகதிர் எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளதாக பத்திரிகையின் ஆசிரியர் செம்பியன் அவர்கள் தமிழ்ரைம் இதழுக்கு தெரிவித்துள்ளார்.





## தமிழைக்காக்கும் யேர்மனி தமிழ்க்கல்விக்கழகம் 26வது அகவையில்







தமிழ்க்கல்விக் கழகத்தின் 26வது அகவை நிறைவு விழா சித்திரை மாதம் 2ம்திகதி முதல் மானிலங்கள் ரீதியாக ஆறு இடங்களை மையப்படுத்தி, சுற்றுவட்டாரங்களில் உள்ள தமிழாலயங்களின் பாடசாலைகளை ஒருங்கிணைத்து வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வந்துள்ளது.

02.04.2016 சனிக்கிழமை வடமாநில தமிழாலயங்களை இனைத்து கனோவர் ( Hannover) நகரிலும் 03.04.2016 ஞாயிற்றுக்கிழமை வடமத்திய தமிழாலயங்களை இணைத்து விற்றன் (Witten) நகரிலும், 09.04.2016 சனிக்கிழமை தென்மேற்கு தமிழாலயங்களை இணைத்து புட்லிங்கன் (Püttlingen) நகரிலும், 10.04.2016 ஞாயிற்றுககிழமை தென்மாநில தமிழலாயங்களை இணைத்து ஸ்ருற்காட் (Stuttgart) நகரிலும் 16.04.2016 சனிக்கிழமை மத்திய மாநில தமிழாலயங்களை இணைந்து Bergeim நகரிலும் கொண்டாடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் 12ம் ஆண்டு சித்தியடைந்த மாணவர்களுக்கு சிறப்பான மதிப்பளிப்பும், யேர்மன் மட்டத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் தமிழ்த்திறன் போட்டிகளில் யேர்மன் மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர் களுக்கும் விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் தமிழாலயமாணவர்கள்,பெற்றோர்கள், ஆசிரியர்கள், தமிழாலய நிர்வாகிகள் மற்றும் தமிழ்க் கல்விக் கழகத்தின் பொறுப்பாளர், பிரிவுசார் பொறுப்பாளர்கள், மாநிலச் செயற் பாட்டாளர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்துள்ளனர்

டோட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

100 பேர் வரை அமரக்கூடிய
இருக்கை வசதிகள் கொண்ட மண்டபம்.


உங்கள் அனைத்து விதமான மண்டபத் தேவைகளுக்கும்
தமிழர் அரங்கத்தை பயன்படுத்தலாம்.

Rheinische Str . 76 – 80, 44137 Dortmund, Germany
Tel - 0049 (0) 231 950 979 00 , Mobile - 0049 (0) 151 633 633 33




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூர் வாளின் நிழலில்.




விடுதலைப்புலிகளின் அரசியல்துறை மகளிர் அணியின் பொறுப்பாளராக இருந்த தமிழினி என்ற சுப்ரமணியம் சிவகாமி, எழுதிய ஒரு கூர் வாளின் நிழலில், போர்க்காலம் ஆகிய அரு நூல்கள் அவரது கணவர் ஜெயகுமரன் அவர்களின் முயற்சியில் 19-ம் திகதி சனிக்கிழமை ( 19.03.2016 ) அன்று கிளிநொச்சியில் வெளியீடு செய்து வைக்கப்பட்டுள்ளது.

பள்ளி மாணவியாக இருந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் பங்கேற்ற விதம், பின்னர் அரசியல்துறை பொறுப்பாளராக ஏற்பட்ட அனுபவங்கள் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிய ஒரு சுயசரிதையாக இந்த நூல் அமைந்திருந்தாகவும் தமிழினியின் கணவர் தெரிவித்துள்ளார்.

மேலும் புனர்வாழ்வு முகாமிலிருந்து 2013-ம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட தமிழினி, 2014-ம் ஆண்டின் இறுதிக் காலத்தில் இந்த நூலை எழுத முடிவு செய்ததாகவும், தமிழினி இறுதிக்காலங்களில் நோய் வாய்ப்பட்டிருந்த காரணத்தினால் அந்த நூலின் வெளியீட்டை பிற்போட வேண்டிய தேவை ஏற்பட்டதாகவும், அவர் இறந்த பின்னர் அவரது விருப்பத்தை நிறைவு செய்வதாகவும் ஜெயக்குமரன் கூறியுள்ளார்.




ஏற்கனவே, இந்திய பதிப்பாக காலச்சுவடு எனும் நூல் தமிழ்நாட்டில் 27.02.16 அன்று வெளியிடப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் கிளிநொச்சியில் வெளியிடுவதற்கு காவல்துறையினர் தடுத்துள்ளதுடன், முன்னாள் பயங்கரவாதிகளின் படங்கள் அவர்களின் சீருடையுடன்.. சட்டவிரோத மானது' என்று முன்னர் அனுமதி மறுத்திருந்த நிலையில், அரசின் உயர்மட்ட அதிகாரிகளின் தலையீட்டில் தற்போது அந்த அனுமதி கிடைத்துள்ளதாக கூறப்படுகின்றது.

சில ஆண்டுகள் புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழினி, 2003ம் ஆண்டு விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் சுகவீனம் காரணமாக கடந்த ஆண்டு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

---

# மீட்கப்பட்டது பொட்டு அம்மானின் தொப்பியா?

நாரஹேன்பிட்டி விரைவுத் தபால் (கூரியர்) நிறுவன தலைமையகம் ஒன்றில் வைத்து லண்டனுக்கு அனுப்புவதற்கு தயாராக இருந்த பொதி ஒன்று சந்தேகத்திற்கு இடமான முறையில் இருந்ததனால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

அதன் போது அந்த பொதியில் 6 ரின் மீன்கள், 4 பால் ரின்கள், 4 பெட்சீட்டுக்கள் மற்றும் ஒரு காற்சட்டை ஆகின இருந்துள்ளன. அந்த காற் சட்டையின் பைக்குள் மிக சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தமிழழ விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் தொப்பி யொன்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து நாரஹேன்பிட்டி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய காவல்துறையினரால் நடாத்தப்பட்ட விசாரணைகளின் போது குறித்த தொப்பியானது தமிழீழ விடுதலை புலிகளின் உயர் மட்ட தலைவர்கள் பயன்படுத்தும் தொப்பி என பொலிஸார கண்டறிந்துள்ளனர்,





மேலும் அந்த பொதியானது குறித்த விரைவுத் தபால் நிறுவனத்தின் வவுனியா கிளையில் இருந்து கொண்டு வரப்பட்டு முகத்துவாரத்திலிருந்தே நாரஹேன்பிட்டி தலைமையகத்துக்கும் அனுப்பட்டுள்ளதை உறுதி செய்துகொண்டனர்.

அத்துடன், லண்டனுக்கு அனுப்பப்பட ஆயத்தமாக இருந்த குறித்த தொப்பியானது விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த பொட்டு அம்மானினால் பயன்படுத்தப்பட்டதாக பொலிஸார் சந்தேகித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் ஊடாக வவுனியாவில் இருவரை கைது செய்துள்ளதாகவும், சந்தேக நபர்கள் இருவரும் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

குறித்த பொதியானது லண்டனில் உள்ள இலங்கையரான ஒருவருக்கு அனுப்பட இருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளதனால், மேலதிக விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகவும். காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.


---

suresh
asiafrischmarkt
苏利亚洲新鲜超级市场
Inh. Suresh Pararajasingam

ASIEN SUPERMARKT

Suresh Asiafrischmarkt, Brüderweg 6, 44135 Dortmund, Tel: +49 (0)231 55 17 60, Fax: +49 (0)231 55 47 51
Email.-info@asia-shop-dortmund.de

உடன் மரக்கறி வகைகள், உடன் இறைச்சி வகைகள், உடன் மீன் வகைகள் ,உடன் பழவகைகள், என்பனவற்றுடன் தாயகத்திலிருந்து தருவிக்கப்பட்ட மளிகைப் பொருட்களும் உங்கள் தெரிவுகளுக்கு ஏற்ப மலிவு விலையில் தரமாக எம்மிடம் கிடைக்கும்.





அனைத்து வகையான உடன் மீன் வகைகளும் சுத்தம் செய்து கொடுக்கப்படும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனிதப் பிறப்பானது இந்தப் பூவுலகில் மகத்தான பிறப்பாகும். ஒவ்வொரு மனிதனும் இப்பூமிப் பந்தில் அவதரிக்கும்போது அவன் என்றோ ஒருநாள் இறந்துவிடுவான் என்பது எவ்வளவு உண்மையான விடையமாகும். மனிதர் களில் ஒரு சிலர் பிறக்கும்போதே சில குறை பாடுகளுடன் பிறந்துவிடுவது ஆண்டவன் படைப்பு என்று நாம் கூறுவோம். நம்மவர்களால் சொல்லப்படும் கூன், குருடு, செவிடு எனச்சொல்லி ஒருவர் பிறந்துவிட்டால் நமது நாட்டைப் போன்ற வறிய நாடுகளில் அந்த உயிர் பிரியும்வரை அந்தக் கறைபாட்டுடன் பிறந்தவர் வாழ்வு அதோ கெதிதான்.

## உடல் ஊனம் ஒரு தடையா!...

ஆனால் வளர்ந்த , வசதிபடைத்த நாடுகளில் இப்படிப்பட்டவர்களை ஒருபோதும் ஒதுக்கமாட்டார்கள்.. அவர்களுக்கென விசேட கவனிப்புக்கள், ஏற்பாடுகள், பாதுகாப்பு, என வாழ்வியல் அம்சங்கள் சிறப்பாக இருக்கும்.. இதனால் குறைபாடுகளுள்ள பலர் பல துறைகளில் அதீத திறமை சாலிகளாகக் காணப்படுவதுடன் அவர்கள் தாம் வாழும் நாடுகளுக்குப் புகழையும் ஈட்டிக்கொடுக்கிறார்கள்.

இங்கு இப்படங்களில் காணப்படும் ஒரு ஜேர்மனிய இளைஞனைப் பற்றியதாகவே இக்கட்டுரை அமைகின்றது. இவர் பிறப்பிலேயே கை, கால் இல்லா மல்தான் பிறந்தவர். இவரின் பெயர் ஜெனிஸ் மைக் டேவிட் இவரின் வயது 24. ஜேர்மனி- ( bochum) "போகும்" நகரில் பிறந்தவர். சிறுவயது தொடக்கம், ஒழுக்காகக் கல்வி பயின்ற இவர் தந்போது தலைநகர் பேர்ளினிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் சமூக விஞ்ஞான பொருளாதாரத்தறையில் பட்டப்படிப்பை மேற்

இவர் சுயமாகவே தனது அன்றாட வேலைகளைச் செய்துகொள்கிறார். காலைக் கடன்களிலிருந்து மகிழூர்ந்து (கார்) ஓடவும் கற்றுக்கொண்டுள்ளார். பேரூந்து (பஸ்) தொடரூர்ந்து (றெயின்) போன்றவற்றில் தனியாகவே பிரயாணம் செய்கிறார்.



இவருக்கென உருவாக் கப்பட்ட இயந்திர பிரயாண வண்டிதான் இவருக்கு உற்றதுணையாக விளங்குகின்றது. கடைகளுக்குச் சென்று பொருட்கள் வாங்கவோ உணவுவிடுதிக்கு நண்பர்களோடு சென்று உணவு உண்டு, குடித்துப் பேசிமகிழவோ இந்த வண்டிதான் இவருடன் உடனிருக்கின்றது. இவற்றைவிட பொது நூலகத்துக்குச் சென்று படிப்பதற்கு பல்கலைக் கழகம் சென்று விரிவுரைகளை கேட்பதற்கும் இவரால் முடிகின்றது. தற்போதைய காலத்திற்கு ஏற்ப கணனியையும் இலகுவாகக் கையாண்டு பிறரைப் போல் மகிழ்வாகவே இருக்கின்றார்.

பொது இடங்களுக்கு, கொண்டாட்டங்களுக்கு, விழாக்குளுக்கும் சென்றுவரும் இவர் கழிவறைகளுக்கும் சென்று தனது தேவைகளையும் சுலபமாகச் செய்துகொள்ளுகின்றார். வீட்டில் தான் உண்டு, குடித்த பாத்திரங்களை ஒன்று சேர்த்து பாத்திரங்கள் கழுவும் மெசினில் இட்டு கழுவிச் சுத்தம் செய்வார்.

பத்திரிகையாளர்கள் இவரைக் கண்டு பேட்டி எடுத்தபோது "காவலர்கள் உதவி யாளர்கள் எவரும் எனக்கில்லை நான் சந்தோசமாக வாழ்கிறேன்" எனச்சிரித்த முகத்துடன் பேட்டியளித்திருக்கிறார்

இவற்றைப் பார்க்கும் போது நம் பிறந்த தேசத்தை ஒரு கணம் நோக்கினால் இப்படியான குறைபாடுடன் ஒருவர் பிறந்துவிட்டால் ஏன் அந்தக் குடும்பத்தவர்களாலேயே தள்ளி வைப்பதும் ஒதுக்கி வைப்பதும் சர்வசாதாரணம். சமூகத்தாலும் அரசாங்கத்தாலும் கைவிடப்பட்ட எத்தனை ஆயிரம் பேர் வீதிகளிலும் கோவில்களி லும் கிடந்து பிச்சை எடுத்து வாழ்கிறார்கள்.

நமது நாட்டில் கடந்த 30 வருடங்களுக்குமேல் இடம்பெற்ற போரின் வடுக்கள் இப்படிப்பட்ட ஊனமானவர்களையும் விட்டுச் சென்றுள்ளது. இவர்களின் வாழ்வாதாரத்திற்கு அரசு சில உதவிகளைச் செய்துவந்தாலும் அவர்களின் வாழ்வு போராட்டம் நிறைந்ததாகவே இருந்துவருகின்றது.



ஆகவே இப்படிப்பட்டவர்கள் மீது நாம் கருணை காட்ட வேண்டும். புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் மனம் வைத்தால் முடியாதவை ஒன்றுமில்லை. ......

அவர்களின் வாழ்வு வளம் பெறவேண்டும். மீள் ஒளி பெறவேண்டும். இவர்களின் ஊனங்களை நாம் பெரிது படுத்தக்கூடாது. அவர்களும் இந்தப் பூமியில் வாழப் பிறந்தவர்கள்தானே. அவர்களுக்கும் ஆசைகள், விருப்புகள், உணர்வுகள், இருக்கின்றன. மாற்றுத் திறனாளிகளான இவர்களிடம் பல திறமைகள், முயற்சிகள், திட்டங்கள், ஆக்கங்கள் நிறையவே காணப்படுகின்றன. அவர்களை நல்வழிகாட்டி வாழ வைக்க வேண்டியது நமது கருணையல்லவா. நமது மனிதநேயக் கடமையல்லவா!...

ஆகவே நாம் "கண் இருந்தும் குருடர்களாக வாழாமல்" மனிதப் பண்போடு, மனித நேயத்தோடு இப்படியாக நம் தாயகத்தில் பாதிக்கப்பட்டு வாழ்வுக்குப் போராடிக்கொண்டிருக்கும் உறவுகளுக்குக் கருணை காட்ட வேண்டும். "கண் முன்னே காணும் தெய்வங்களுக்கு உதவாமல் கண் காணாத கடவுளர்களுக்கு உதவுவதில் எந்த நன்மையும் நமக்குக் கிட்டப்போவதில்லை" என்ற உண்மையை நாம் புரிந்துகொண்டு வாழ்வோம்!.. இல்லாதோருக்கு இருப்போர் கை கொடுப்போம்!... இனிதே வாழ்வோம்!...

-சிவராஜா-







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது ஒரு அதிசயம்தானே?!

## முதலையிடம் காணப்படும் தொடும் உணர்வு



உலகில் பலவிதமான பிராணிகள் வாழுகின்றன. இவ்வாறான பிராணிகளில் கடிக்கும் வல்லமை கொண்டவை என்றால் சிங்கம் புலி என்பவையே எமது மனதில் எழும்பும் அல்லவா? ஆனால் அப்படியல்ல உலகில் வாழும் பிராணி களில் அதிக வலிமையுடன் கடிக்கும் பிராணி முதலையாகும்.

சிங்கம் புலியைவிட 3 மடங்கு அதிக வலிமையுடன் கடிக்கும் குணம் கொண்டது. அதுமட்டுமின்றி தொடும் உணர்வு அதிகமாக காணப்படுகிறது. இதன் தொடும் உணர்வை ஒப்பீட்டுரீதியில் பார்த்-தால் மனிதர்களில் விரல் நுனிகளில் இருக்கும் தொடு உணர்வை விட முதலையின் வாயிலும், தாடையிலும் இருக்கும் தொடு உணர்வு மிகவும் அதிகமாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முதலையைப் பொறுத்தவரை அதன் தாடையிலும் ஆயிக் கணக்கான புலன் உறுப்புக்கள் (Sense Organs)இருக்கின்றன. இது பற்றிய ஆய்வை மேற்க்கொண்ட „டங்கள்லிச்" சொல்கிறார். முதலையில் சிலசில இடங்களில் தொடு உணர்வு அதிகமாக இருப்ப-தால் அளக்கும் கருவிகளால் கூட கண்டறிவது மிகமிக கடினமாக உள்ளது. முதலை தன் வாயில் இருபபது உணவா அல்லது வேறு ஒரு பொருளா என அறிய இந்த தொடு உணர்வுதான் உதவுகிறது.

இதுமட்டுமின்றி தாய் முதலை தனது குட்டிகளை வா யில் தூக்கிச்செல்லும் போது அதை பாதுகாப்புடன் நசிக்காமல் அழுத்தாமல் கொண்டுசெல்ல இந்த தொடு உணர்வுதான் உதவு கிறது. இவற்றை எல்லாம்பார்க்கும்போது இத்தகைய படைபபுக்-களை எப்படி படைக்க முடியும்!...

இது யாரால் படைக்க முடியும்?! என்ற பல கோணங்களில் சிந்தனைகள் சிதறுகின்றன. படைப்புக்கள் யாவும் பார்க்கும்போது அதிசயம்தான்.

-அதிசயன்-

# கிறிஸ்தவ நற்சிந்தனை

## பிள்ளையும் பலாப்பழமும்

பொதியமலையில் உற்பத்தியாகி பாபநாசம் ,திருநெல்வேலி,ஹீ வைகுண்டம் முதலிய நகரங்களை கடந்து திருச்செந்தூர் பக்கம் கடலோடு கலக்கிறது தாமிரவர்ணி. நெல்லை நகர் அருகே ஓர் சிற்றோடை அதில் சங்கமமாகிறது. அதன் பெயர் „பிள்ளையை போட்டு பலாப்பழம் எடுத்த ஓடை"

ஒரு நாள் ஒரு தாய் தன் ஒரே மகனைச் சுமந்து கொண்டு இவ்வோடைப் பக்கம் போனபோது விரைந்தோடும் ஓடை யில் பலாப்பழம் அடித்துச்செல்வதைக்கண்டு பிள்ளையை கரையில் இறக்கி வைத்துவிட்டு பழத்தைப் பிடிக்க நீரில் இறங்கினாள்.

பாய்ந்து வந்த வெள்ளத்தில் பழத்தை பிடிக்க வெகுதூரம் செல்ல வேண்டியதாயிற்று. இறுதியில் பழமும்கிட்டிற்று, மகிழ்வுடன் கரை திரும்பியபோதுதான் பிள்ளையின் நினைவு வந்தது. அந்தோபரிதாபம் பிள்ளையைக்காண வில்லை.

தவழும் குழந்தை தவறி ஆற்றில் அடிபட்டு போய்விட்டான் என்ற உண்மை உறைத்த போது அழுதாள். புரண்டாள். பயன் என்ன?

இதை வாசிக்கும் எனதருமை நண்பரே ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் ,ஆத்மா எனும் அழியாப் பொருளை தந்திருக்கிறார். அவ்வாத்துமா மிகவும் அருமையானது.அதற்கு ஈடாக நாம் எதையும் செலுத்த இயலாது.

உலகம் முழுவதையும் ஒருவன் சம்பா-தித்தியம் செய்தாலும் தன் ஆத்துமாவை நட்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் எதுவு-மில்லை.

அத்தாய் தன் பிள்ளையை இழந்தது போல நாமும் ஆத்துமாவை இழக்கக்கூடும்.

"ஆசைகாட்டி மோசம் போக்கும் இப்பாமுலகை நம்பவேண்டாம்" என ஒருபக்-தன் பகர்கின்றான்.

நாம் அக்கறையற்று இருப்போமானால் அக்குழந்தை இழுப்புண்டு மாண்டதுபோல நம் ஆத்மாவும் பாவ வெள்ளத்தில் இழுப் புண்டு ஈற்றில் நரகமாகிய அக்கினிக்கடலில் சேர்ந்துவிடும்.

-(சுதந்தினி ஜோன்சன்)-


Neuss நகரில்.....
ShaRun Saree
திருமணப் பட்டுப்புடவைகள், பார்ட்டிசாறிகள் இன்னும் பஞ்சாபிகள் அனைத்தும் நீங்கள் விரும்பும் ரகத்தில் எம்மிடம்
தரமாகவும், மலிவாகவும் கிடைக்கும்!



August-Macke.Str. 79a 41470 Neuss
02137 92 96 836 | 0178 35 79 015
Mobile.- 0178 35 79 002



ஜேர்மனியில் 5 ஆண்டுகளில் 2 சான்றிதழ்களைப் பெற்ற ஒரே உணவகம்

Sweet Chili
Original Srilankisches & Indisches Restaurant
100%Halal |100%Frisch| 100%Naturgewürze|100%Naturkräuter

7 வது ஆண்டில்
அன்றும் இன்றும் என்றும் ஊர் சுவை மாறாத உணவுகளுடன்
தமிழர் உணவகம்



அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை! இன்று டோட்முண்ட் நகரில் ஓர் நானா கடை!

யாழ் நகர் மொக்கன் கடைப் பாணியில் கை தேர்ந்த முஸ்லீம் ஊழியர்களால் முஸ்லீம் முறைப்படி தயாரிக்கப்பட்ட உணவு வகைகள். நாள் தோறும் 10-12 வகையான நம் நாட்டு மரக்கறிகளை சமைத்து ஒவ்வொரு நாளும் வாழையிலையில் பரிமாறும் முதல் Restaurant Sweet Chili! தோசை, பிட்டு, ரொட்டி, சப்பாத்தி உடனுக்குடன் சுடச் சுட புதியது, சுத்தமானது, தரமானது, Halal ஆனது. அழகான Restaurant ல் காதிற்கினிய தமிழ்ப் பாடல்களுடன் நாவிற்கு ருசிமிக்க உணவு வகைகளை அன்புடன் பரிமாற நாங்கள், உண்டு சுவைத்திட நீங்கள்!



50 Sitzplätze

Öffnungszeiten
தினமும் காலை 11:30
இருந்து மாலை 23:30

மேலதிக சலுகைகளை அறிய தொடர்பு கொள்ளவும்!
Rheinische Str.60 - 44137 Dortmund | Tel: 0231 315 46 84| www.sweetchilli-do.de


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கராம்பு

கராம்பு என்னும் வாசனைத் திரவியம் உலக மக்களால் உணவுடன் பயன்படுத்தும் ஒரு பெருளாக விளங்குகின்றது , இது உலகத் தேவையில் 60% வீதம் ஆபிரிக்காவில் விளைவிக்கப்படுகிறது. மற்றும் கிழக்கு ஆசியா இந்தியா இலங்கையிலும் விளைவிக்கப்படுகிறது.



இக்கராம்பு பற்றி மிகச்சுவையான சரித்திர செய்தி ஒன்று உண்டு.

18ம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் பிளேக் நோயால் அதிக மக்கள் பாதிக்கப்பட்டனர். இதனால் நோயற்ற இடங்களை தேடி குடியேறத்தொடங்கினார்கள்.

அப்போது திருடர்கள் பிளேக் நோயாளிகள் வீடுகளை கொள்ளையடித்தனர், இக்கொள்ளையர்கள் பாதுகாவலர்களால் பிடிக் கப்பட்டு சிறையில் அடைக்கப பட்டனர்.
பிளேக் நோய்க்கு அஞ்சாத திருடர்களை அரசு விசாரனை செய்த போது, இந்த கடும் நோய்க்கு பயம் இன்றி அவ்வீடுகளை திருட இத்துணிவு எப்படி வந்தது? என வினவிய போது, கராம்பின் மருத்துவ குணத்தை பற்றி கூறினர். பிளேக் நோய்க்கு அரும்பெரும் மருந்தாக கராம்பு,வெள்ளைப்பூடு,கற்புரம் இம்மூன்றையும் உட்க்கொண்டால் பிளேக் நோய் கிட்ட நெருங்காது என்ற தகவலை சொன்னார்கள்.
இச்செய்திக்காக இவர்கள் விடுதலை செய்யபபட்டார்கள். இதன் பின்பு ஐரோப்பாவில் கராம்பின் பரவல் அதிகமாயிற்று.

சித்தர்கள் இதன் பயன்பாட்டை முன்பே அறிந்து உபயோகித்தனர். ஜீரணசக்தி கழிச்சல் நிறுத்தும் மருந்துகளில் சேர்த்து உபயோகித்தனர்.
நவீன வைத்தியரும் இதன் பயன்பாட்டை அறிந்து உபயோகித்தனர்.
கராம்பை பற்பசை, தலைக்கு பூசும் மருந்து, சவற்காரம். ஏனைய வாசனை திரவியங்களுக்கு கராம்பு கலக்கப்படுகிறது.கராம்பில்

## பொதுவான மருத்துவ குணங்கள்

1 கர்ப்பிணிகளின் வாந்திக்கு நல்ல மருந்து
2 பித்தத்தை போக்கும்
3 பசியைத்தூண்டும்
4 ஓங்காளத்தைப் போக்கும்
5 மேகநோய்,இடுப்பு வலி. வாதநோய் போன்றனவற்றை கராம்பு தைலம் போக்கவல்லது.
6 பேதியை தடுக்கவல்லது
7 வயிற்றில் உள்ள சிறிய நுண்கிருமிகளை கொல்லும்தன்மை கொண்டது.
8 அதிக சுறுசுறுப்பைத்தரும்



## இலகுவாக உபயோகிக்கும் வழி

1 வெற்றிலையுடன் இரு கராம்பை சேர்த்து உண்டால் வாய் நாற்றம் அகலும்"
2..கராம்பை அரைத்து தலையில பற்றுப்போட்டால் தலைவலி நீங்கும்
3 வறுத்த கராம்பு நாலும் வறுக்காத கராம்பு நாலும் சேர்த்து சாப்பிட்டால் இருமல் நிற்கும்.

இவ்வாறான பலவகை நோய்களை குணப்படுத்தும் அரும்மருந்தாக கருதப்படுகிறது.
கராம்பு பொன்னுக்கு சமமானது என்பார்கள்.

,கராம்பை பயன்படுத்தி பலன் பல பெறுவோம்'

-மூலிகைப்பிரியன்-

# இரட்டை தலை விசப்பாம்பு

ஜேர்மனியின் புகழ்பெற்ற Rostock விலங்கியல் பூங்கா 1899ம் ஆண்டில் நிறுவப் பட்டது. சுமார் 56 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் அமைந்துள்ள இந்த பூங்காவில் 320 வகைகளை சேர்ந்த 4,500 விலங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு கடந்த 2015ம் ஆண்டு யூன் மாதம் அதிசய பாம்பு ஒன்று இரட்டைத் தலையுடன் பிறந்து தற்போது 65 கிலோ எடையுடன், 65 செ.மீ நீளத்துடன் வளர்ந்துள்ளது.



இந்த இரட்டை தலை பாம்பை குறித்து பூங்கா அதிகாரியான Antje Zimmermann என்பவர் பேசியபோது, 'இந்த அதிசய பாம்பானது தானாகவே உணவை தேடிக் கொள்ளும். இரண்டு தலைகளின் உதவியுடன் உணவை பிடித்தாலும், ஒரு வாய் வழியாகவே உண்ணும். இதற்கு இரண்டு தலைகள் மட்டுமின்றி, இரண்டு மூச்சு மற்றும் உணவு குழாய்களும் உள்ளன.

அரிதாக ஏற்படும் சில மரபியல் மாற்றங்கள் காரணமாக இந்த விசப் பாம்பு இரட்டை தலையுடன் பிறந்து 10 மாதங்கள் ஆகியிருந்த நிலையிலும், இது இந்த நிமிடம் வரை ஆரோக்கியமாகவே வாழ்ந்து வருகிறது.

இந்த இரட்டை தலை பாம்பை முதன் முறையாக பார்வையாளர்களுக்கு திறந்து வைக்கப்பட்டவுடன், பொதுமக்கள் மிகுந்த உற்சாகத்துடன் கண்டு களித்ததாக Antje Zimmermann தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் சிறுமியைத் தாயாக்கிய முதியவர்

பதினான்கு வயது பள்ளி மாணவியைக் கடத்தி பாலியல் வல்லுறவு புரிந்து அவரைப் பெண் குழந்தை ஒன்றுக்குத் தாயாக்கிய வழக்கில் கந்தையா சித்தவிநாயகம்(62) என் பவருக்கு 15 ஆண்டுகள் கடுழியச் சிறை யும் பா-திக்கப்பட்ட பெண்ணுக்கு 20 லட்சம் நட்ட யீடு செலுத்துமாறும் நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி இந்த வல்லுறவு சம்பவம் நடைபெற்றது. அப்போது பாதிக் கப்பட்ட பெண் 14 வயது பாடசாலை மாணவியாக இருந்தார்.அவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியவர் 62 வயதுடைய வயோதிப-தாக இருந்தார்.இதில் 16 வயதுக்குக் குறை ந்த பாடசாலை மாணவியைக் கடத்தியமை, அவருடன் பாலியல் வல்லுறவு கொண்டமை என்ற இரண்டு குற்றச்சாட்டுக்கள் கந்தையா சித்திவிநாயகம் என்ற வயோதிபருக்குஎதிராக சட்டமா அதிபரினால் குற்றம் சுமத்தப்பட்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.




சம்பவம் நடைபெற்ற தினம் தனக்கு 14 வயது என்றும் வடமராட்சி பாடசாலை யொன்றில் படித்துக் கொண்டிருந்ததாகவும் பாதிக்கப்பட்ட பெண் நீதிமன்றில் சாட்சி யமளித்தார் மேலும் தெரிவிக்கையில் சம்பவம் நடைபெற்ற தினமாகிய கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி மாலை நாலு நாலரை மணிபோல் பூக்கள் பறிப்பதற்காக பற்றைகள்சூழ்ந்த ஒற்றையடி பாதையில் சென்று கொண்டிருந்தேன் அப்போது, கந்தையா சித்திவிநாயகம் பாதையில் நின்றிருந்தார். அவர் எனக்கு குடிப்பதற்கு ஜூஸ் தந்தார். அதை வாங்கிக் குடித்தேன். சில நிமிடங் களில் எனக்கு மயக்கம் வந்தது தெரிந்தது.

அப்போது அவர் எனது கையைப் பிடித்ததை உணர்ந் தேன். அதற்குப் பின்னர் என்ன நடந்தது என எனக் குத் தெரியவில்லை. உணர் வற்று நான் மயங்கிவிட்டேன். பின்னர் ஐந்து ஐந்தரை மணிபோல் நான் மயக்கம் தெளிந்து எழுந்தபோது, எனது உடலில் இரத்த காயங்கள் ஏற்பட்டிருந்ததைக் கண்டேன்.



உடனே சித்திவி நாயகத்தைத் தேடி அவருடையவீட்டிற்குச் சென்றேன். அங்கு ஒருவரும் இருக்கவில்லை. அங்கிருந்து திரும்பி வந்த போது வழியில் அவரை வழியில் கண்டேன்.

நீங்கள் தானே எனக்கு ஜூஸ் தந் தீர்கள்? எனக்கு என்ன நடந்தது? என்னை என்ன செய்தீரக்ள்? என கேட்டேன். அதற்கு அவர் முதலில் நான் என்ன செய்தனானோ? என கேட்டு விட்டு, பின்னர் எனது கழுத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு,

"அம்மா ஆக்களுக்குச் சொன்னால் குடும்பத்தில் ஒருவரையும் உயிருடன் பார்க்கமாட்டாய். அக்காவிற்கும் இப் படித்தான் செய்வேன்" என கூறினார்.

சிறிது காலத்தின் பின்னர் நான் கர்ப்ப-மாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் எனக்கு பெண்குழந்தை பிறந்தது என கூறினார்.

டிஎன்ஏ அறிக்கையிலும் பிறந்த குழந்தை யாகிய ஹம்சிக்காவின் விஞ்ஞான ரீதியாக தாய் பாதிக்கப்பட்ட பெண் என்பதும் தந்தை சித்திவிநாயகம் எனவும் ஆய்வில் தெரியவந்-துள்ளது.

விசாரணையின் முடிவில் எதிரியைக் குற்றவாளியென நீதிமன்று கண்டுள்ளதாகத் தெரிவித்த நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் பாதிப்பின் காரணமாக பிறந்துள்ள குழந்தைக்கும் நட்டயீடாக எதிரி 20 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்றும். இந்த நட்டயீட்டைக் கட்டத் தவறினால் 2 வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். அத்-துடன் 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும். கூறியதுடன் பாலியல் வல்லுறவுக் குற்றம் புரிந்தமைக்கு பத்து ஆண்டுகள் கடுழியச் சிறைத்தண்டனையும் ஆட்கடத்தல் குற்றத்திற்கு 5 ஆண்டுகள் கடுழியச் சிறைத்தண்ட னையும் வழங்கித் தீர்ப்பளித்துள்ளார்.

குறிப்பு.- இந்த் தீர்ப்பு வருவதற் முதல் நாள் குற்றவாளி நஞ்சருந்திய நிலை யில் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தினம்...

ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம்தான் வேலை நேரம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்பதான் ஊதியமும் தரப்படுகிறது. இந்த எட்டு மணி நேர வேலை என்பதும், அதற்கேற்ற ஊதியம் என்பதும் எங்கே, எப்போது, எதற்காக, எப்படி நிர்ணயிக்கப்பட்டது?

இதற்குப் பின்னே ஒரு முக்கியமான தொழிலாளர் தினமான மே தின வரலாறு உள்ளது!




1880 -ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் தொடங்கி, 1890 - ஆம் ஆண்டு பாரீசில் உருவானதுதான் மே தினம். அல்லது, உலகத் தொழிலாளர் தினம். அதாவது மே 1. மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றிய உழைப்பாளர்கள் முற்காலத்தில் 18 மணி நேரம் வேலை வாங்கப்பட்டனர். இதை எதிர்த்து தாங்கள் உழைக்க வேண்டிய நேரத்தை 8 மணி நேரமாக வரையறுத்து அதற்காக போராடி அந்த உரிமையைப் பெற்ற நாளே மே தினம்!

18 - ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மேற்கு நாடுகளில் ஒரு கொடுமையான வழக்கம் இருந்தது. நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரமும், சில சமயங்களில் 20 மணி நேரமும் வேலை செய்யும்படி தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்கப் பட்டனர். இதனால் நாளொன்றுக்கு பத்து மணி நேரம் வேலை செய்யும் உரிமை தொழிலாளர்களுக்கு வேண்டும் என்ற கோரிக்கையுடன் இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் போராடியது.

1832 - ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள பாஸ்டனில் கப்பலில் பணியாற்றிய தச்சுத் தொழிலாளர்கள் 10 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். அதுபோல, பிலடெல்பியாவிலும், பென்சில்வேனி யாவிலும் இந்தக் கோரிக்கையை முன்வைத்து இயக்கம் நடத்தப்பட்டது. பென்சில்வேனியாவில் நிலக் கரிச்சுரங்கத் தொழிலாளர்களும், ரயில்வே தொழிலாளர்களும் குறைவான வேலை நேரத்தை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டன. இந்த தொழிலாளர்கள் மற்றும் சிறு வணிகர்கள் கூட்டமைப்பு (ஃபெடரே'ன் ஆஃப் ஆர்கனைஸ்டு டிரேடர்ஸ் அண்ட் லேபர் யூனி யன்ஸ்) 1884 - ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இந்தக் கூட்டமைப்பு எட்டு மணி நேர வேலை கோரிக்கையை முன் வைத்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இது மிகப் பெரிய தொழிலாளர் ஒற்றுமைக்கு வழி வகுத்தது. கறுப்பு அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டதன் பின்னணியிலேயே இந்த இயக்கம் வலுப்பெற்றது.

அதற்கு முன்பு கறுப்பு அடிமைகள், தாங்கள் இறக்கும்வரை ஒரு எஜமானனின் கீழ் உழைத்து ஒடுங்கித் துன்புற்று வாழவேண்டியிருந்தது.

(மாமேதை கார்ல் மார்க்சின் மூலதனம் என்னும் உலகப் புகழ் பெற்ற நூல் 1867 - ஆம் ஆண்டு வெளியானது. இது பொருளாதாரச் சித்தாந்தம் குறித்த நூலாகும். இந்த நூலில், எட்டு மணி நேர உழைப்பைக் கோரும் இயக்கத்தைப் பற்றி வேலை நாள் குறித்து- என்னும் தலைப்பில் மார்க்ஸ் எழுதியுள்ளார்).

அத்துடன் அந்தக் கூட்டமைப்பு, மே 1, - 1886 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது. இந்த இயக்கமே மேதினம் பிறப்பதற்குக் காரணமாகும்.

1886 - ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், சிகாகோ நகரில் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் தொழிலாளர்கள் கலந்து கொண்ட மேதின இயக்கம் தொடங்கியது. பிறகு, தொழில் நகரங்களான சிகா கோ, வாசி ங்டன், நியூயார்க், பிலடெல்பி யா, மிலவாக்கி, சின், சினாட்டி, பால்டிமோர், பிட்ஸ்பர்க், டெட்ராய்ட் என அமெரிக்கா முழுவதும் 3,50,000 தொழி லாளர்கள் பங்கேற்ற மா பெரும் வேலை நிறுத்தம் தொடங்கி யது. இந்த வேலை நிறுத்தத்தில் 1200க்கும் மேற்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த தொழ லாளர்கள் கலந்து கொண்டனர். இந்த எழுச்சி மிக்க வேலை நிறுத்தத்தால் அமெரிக்காவில் உள்ள பெரிய நிறுவனங்கள் மூடப்பட்டன. ரயில் போக்குவரத்து தடைப் பட்டது. தொழிலாளர் ஊர் வலங்கள் அமெரிக்காவை உலுக்கின.



## சிகாகோ பேரெழுச்சி

மெக்கார்மிக் ஹார்வெஸ்டிங் மெசன் என்பது ஒரு தொழில் நிறுவனம். 1886 - ஆம் ஆண்டு மே 3 - ஆம் நாளன்று இந்த நிறுவனத்தின் வாயி லில் 3000 -த்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அணி திரண்டனர். கண்டனக் கூட்டம் நடத்தினர். சிகாகோ கமர்ஷியல் கிளப் என்பது முதலாளி கள் சங்கம். இந்தச் சங்கம், தொழிலாளர்களின் போராட்டத்தை, வேலை நிறுத்தத்தை முறியடித்தே ஆகவேண்டும் என்று தீவிரமாகச் செய்பட்டது. முதலாளிகள் சங்கத்தின் தூண்டுதலின் காரணமாக இலினாய்ஸ் தேசியப் படையினர் தொழிலாளர்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர். இதில் நான்கு தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.



அனார்க்கிஸ்ட் என்ற தொழிலாளர் அமைப்பு. தொழிலாளர்கள் மீது இலினாய்ஸ் தேசியப் படை நடத்திய காட்டுத்தனமான தாக்குதலைக் கண்டிப்பதற்காக ஒரு கண்டனக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது. இந்தக் கூட்டம் மே 4- ஆம் தேதி, „ஹே மார்க்கெட் சதுக்கம்' என்னுமிடத்தில் நடந்தது. கண்டனக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கூடினர். கூட்டம் தொடங்கி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது திடீரென்று தேசியப் படையினர் மீது ஒரு குண்டு வீசப்பட்டது. அதில் ஒருவர் கொல்லப்பட்டார். 70 பேர் காயமடைந்தனர். பதிலுக்கு தேசியப்படையினர், தொழிலாளர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டதில் ஒரு தொழிலாளி கொல்லப்பட்டார். தேசியப் படையினர் மீது குண்டு வீசியதைக் காரணம் காட்டி, தொழி லாளர் இயக்கத்தை முன்னின்று நடத்திய அனார்க்கிஸ்ட் அமைப்பைச் சேர்ந்த எட்டுபேர் மீது, கொலை சதித் திட்டம் தீட்டியதாக வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்றம் எந்த ஆதாரமும் இல்லாமல் அவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்து, தூக்குத் தண்டனையும் விதித்தது.

அனார்க்கிஸ்ட் தொழிலாளர் அமைப்பைச் சேர்ந்த தலைவர்களான, „ஆகஸ்ட் ஸ்பைஸ்', „ஆல்பர்ட் பார்சன்ஸ், அடால்ஃப் ஃபி'ர „ஜார்ஜ் ஏங்கல் ஆகிய நான்குபேர் 1887 - ஆம் ஆண்டு நவம ்பர் 11 - ஆம் நாள் தூக்கிலிடப்பட்டனர். லூயிலிங்க் என்னும் இன்னொரு தலைவர் சிறையிலேயே தற்கொலை செய்துகொண்டார்.

கொல்லப்பட்ட தொழிலாளர் தலைவர்களுக்கான இறுதி ஊர்வலம் 1887 - ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 - ஆம் நாள் நடந்தது. அந்த ஊர்வலத்தில் அமெரிக்க தேசமே அணி திரண்டது. நாடு முழுவதிலுமிருந்து ஐந்து லட்சம் பேர் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். அதுமட்டுமி ன்றி அன்றைய தினம் அமெரிக்கா முழுதும் கறுப்பு தினமாக அனுசரிக்கப்பட்டது. சிறைபட்டிருந்த மற்ற மூன்று தலைவர்கள் 1893 - ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டனர்.

1888 - ஆம் ஆண்டு செயின்ட் லூயியில் அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பு கூடியது. அப்போது எட்டு மணி நேர வேலை இயக்கத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது. அப்போது அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவராக இருந்தவர் சாமுவேல் கோம்பர்ஸ் என்பவர்.

## அனைத்து நாடுகளிலும் மே தினம்

1889 - ஆம் ஆண்டு ஜூலை 14 - ஆம் நாள் அன்று, பாரீசில் சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம் மாநாடு கூடியது. (இந்தக் கூட்டத்தை இரண்டாவது அகில ம் என்பார்கள்). இதில் பிரடெரிக் ஏங்கல்ஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டில் சிகாகோ சதியை கடுமையாகக் கண்டித்தார்கள். கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேரப் பணிக்கான போராட்டத்தைத் தொடர்வது என்றும், 1890, மே 1 அன்று சர்வதேச அள வில் தொழிலாளர் இயக்கங்களை நடத்த வேண்டும் என்றும் அறைகூவல் விடுக்கப்பட்டது. உலகத் தொழிலாளர்கள் அனைவரும், எட்டுமணி வேலை நேரத்திற்காக போர்க்குரல் கொடுக்கவேண்டிய நாள் மே 1 என்று அறிவிக்கப்பட்டது.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுசேருங்கள்! என்பது தான் மே தினம் நமக்கு அளிக்கும் முழக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAY 18

மே 18 என்பது ஈழத் தமிழர்களாகிய எம் வாழ்வில் என்றும் நீங்காத துயரத்தை ஏற்படுத்திய நாள்.

இந்தத் தேசிய துக்கநாளில் எமது தேச விடுதலைக்காக தங்களை ஈகம் செய்தவர்களையும் இனஅழிப்பு என்ற போர்வையில் இலங்கை அரசின் திட்டமிடலுடன் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொது மக்களையும் நெஞ்சில் நிறுத்தி அவர்களின் ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்தித்து எமது அஞ்சலியைச் செலுத்திக்கொள்கின்றோம்.

இலங்கை அரசினால் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் தொடர்ச்சியாக இன்றைய நவீன உலகத்தில், ஒரு மனிதாபிமானமற்ற அரசினால் 2009 ம் ஆண்டு மிகவும் மிருகத்தனமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு இன அழிப்பு நிகழ்வு தான் முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது என்பது பல ஆதாரங்களுடனும் நிரூபிக்கப்பட்ட பதிவு.

இருந்தாலும் இந்த 2009 மே 18 நாள் கொடுமைகளுக்கான நீதி இன்னும் வழங்கப்படவில்லை என்பதுடன் குற்றவாளிகளும் தண்டிக்கப்படவில்லை என்பது தான் உண்மை மீண்டும் மீண்டும் துயரத்தில் ஆழ்த்தும் நிகழ்வாக தொடர்கின்றது.

யுத்த விதிமுறை மீறல்கள் நடை பெற்றதற்கும், மனித உரிமை மீறல்கள் நடைபெற்றதற்கும் போதிய ஆதாரங்கள் இருந்தும் இதுவரை எந்த முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் நல்லாட்சியாளர்கள் செய்யவில்லை என்ற போதிலும் உலக நீதி மன்றான ஐ.நா. சபையும் மௌனமாக இருந்து வேடிக்கை பார்ப்பது எப்படி நீதியைப் பெற்றுத்தரும் என்பது தான் எமது கேள்வி?

ஏனெனில் ஆதாரம் தம்மிடம் இருப்பதாக ஐ.நா மனித உரிமைகள் சபையே தெரிவித்துள்ள நிலையில் இன்னும் யாருக்காகக் காத்திருக்கின்றார்கள் என்பது புரியவில்லை.

யுத்த விதிமுறை மீறல்கள் என்பதை இரண்டாவது நிலையில் வைத்து ஆராய்ந்தாலும் மனித உரிமைமீறல்கள் என்பதற்கேனும் நீதி இல்லை என்பதை எப்படி நியாயப்படுத்துவது.





யுத்த தவிர்ப்பு வலயம் என்றும் பாதுகாப்புப் பிரதேசம் என்றும் இடங்களைப்பிரித்து அங்கு பொதுமக்களை வரவைத்துத்தானே அதிகமாக படுகொலையைச் செய்தார்கள். அதிலும் குறிப்பாகக் பொது மக்கள் உயிர் காக்க அடைக்கலம் புகுந்திருந்த தொண்டு நிறுவனங்கள், முதியோர் சிறுவர் கர்ப்பிணிகள் படுகாயமடைந்தவர்கள் உட்பட்ட நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களைப் பராமரித்த வைத்தியசாலைகள் என்பனவற்றைத் தாக்கி கொலைகளைப் புரிந்ததுடன், ஒவ்வொரு ஊராக இடம்பெயர்ந்து, ஒட்டுத்துணியையும் இழக்கும் நிலையில் ஒருவேளை உணவுக்கும் ஏங்கியபடி வீதியோரங்களிலும் மர நிழலகளிலும் பதுங்குழிக்குள்ளும் வாழ்ந்த சாதாரண பொதுமக்களையும் துடிதுடிக்கக் கொலைசெய்ததற்கும் என்ன நியாயத்தையும் காரணத் தையும் இந்தக் கொலைகளைப் புரிந்தவர்களால் கூறமுடியும்.



ஊர் ஊராகச்சென்று காணாமல் போனவர்கள் விபரங்களைச் சேர்க்கும் போது . கூட முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற கொடுமைகளை கண்கண்ட சாட்சிகளாக மக்கள் பதிவு செய்கிறார்களே அந்த மக்களுக்குக் கூறும் நீதி என்ன?,

இறுதியுத்தின்போது இராணுவத் தளபதிளாக இருந்த சரத்பொன் சேகா கூட யுத்த இறுதியில் நடைபெற்றாகக் கூறப்படும் சம்பவங்களுக்கு உண்மை கண்டறியப்பட வேண்டும் என்று கூறி நடைபெற்ற சம்பவங்களை தெரிவிக்கின்றாரே. அவரை ஏன் விசாரணை செய்யவில்லை?

ஐ.நா சபையிடம் இருப்பதாகக் கூறும் ஆதாரங்களை வைத்து என்ன செய்யப்போகின்றார்கள்?

இப்படி, ஒவ்வொரு வருடமும் மே 18 துக்க நாளை நினைவில் கொள்ளும் போதும் எம்முள் இதுபோன்ற பல கேள்விகள் எழுவதை எம்மால் இன்னமும் தவிர்க்க முடியவில்லை. விடைசொல்லத்தான் யாரும் இல்லை.

மே 18 ஒரு துயர் சுமக்கும் வரலாற்றுப்பதிவு.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரமென்றும் சொல்ல முடியாத மனிதன்

ஏ.... மரங்களே!...............
என்ன பார்க்கிறீர்கள்?
உங்களை அல்ல...
மரங்களைத்தான்.
உங்களிடம்தான் பதவி மோகம்
பஞ்சோத்தித் தன்மை
காட்டிக் கொடுப்பு
கழுத்தறுப்பு நடவடிக்கை
போட்டி பொறாமை
பொருள் தேடி அலைச்சல்
நெஞ்சில் வஞ்சம்
நேர்மையில்லாத் தன்மை
சாதி சமய பேதம்
சதி நடவடிக்கைகள்
இப்படிப் பல...
அதனால் தான்...
உங்களை அல்ல...

நீங்கள்
நாட்டுக்கு என்ன செய்தீர்கள்?
நம் மக்களுக்குத்தான்
என்ன செய்தீர்கள்?
அவர்களுக்கு
ஒரு நேர உணவுக்கு
உதவுங்கள் என்றால்
ஓலமிட்டு ஒப்பாரி வைக்கிறீர்கள்.
ஆர்ப்பாட்டம் செய் என்றால்
ஐ...ஐ,..யோ... வேலை என்பீர்.
ஆனால் மரங்கள் அப்படியில்லையே!
அதனால்தான் உங்களை அல்ல...

மரங்கள்
தமிழ் மக்களுக்கு
மறைவிடம் கொடுத்து
உண்ண உணவும்
உறங்க இடமும் கொடுத்து
நிழல் கொடுத்து நீர் கொடுத்து
தமிழரைக் கொல்ல வரும்
குண்டுகளைத் தாமும் தாங்கி
தமிழரைப் பாதுகாக்க
தியாகிகளுடன் தாமும்
தியாகம் புரிகின்றனவே
அவைகளின் பெயரால்
உங்களை எப்படி அழைக்க முடியம்?
அதனால்தான் உங்களை அல்ல...

தேச விடுதலைக்காய்
தம்மை அர்ப்பணித்த தியாகிகள் போல்
தமிழரைக் காப்பாற்றத்
தம்மை அழிக்கும் மரங்கள்
அவர்களைப் பாதுகாத்து
அபயமளிக்கும் மரங்கள்
தாம் வாழும் போதும் தன்னினம் வளரத்
தளைகொடுக்கும் மரங்கள்
மடிந்தபின்பும் தமதினம் செழிக்க
உரங் கொடுங்கும் மரங்கள்
உங்களைவிட உயர்ந்தவை அல்லவா
அதனால்தான் உங்களை அல்ல..
ஏ□.மரங்களே ..............................
என்ன பார்க்கிறீர்கள்?
உங்களை அல்ல...
மரங்களைத்தான்.

மணியம்.,
27.06.2009. நன்றி,- நெருடல்

## இசைத்தமிழ்

கல்லோடு கல்லுரசி தீ பிறப்பதைப்போல்
சொல்லோடு சொல்லுரசி மொழிமலர்வதை பார்
மொழியோடு மொழியுரசி இசையெழுவது போல்
தமிழோடு தமிழுரசி தலைநிமிரும் பண்ணிசைச்சீர்

வல்லினம் மெல்லினம் இடையினமென
சொல்லினம் கொண்ட வல்லினம் தமிழ்
பல்லினம் கொண்டோர் பகருவர் பாரில்
எம்மினம் எழுத்திடுமோ பிறந்த எம் ஊரில்

கரை கடந்து அலை செல்வதில்லை
இசை எழுந்து தமிழ் தாண்டுவதில்லை

மொழிவழி வந்ததா தமிழ் இசை
இசைவழி வந்ததா மொழி அசை

இசைத்தமிழ் தந்தன காவியங்கள்
நடைத்தமிழில் நின்றன வீரியங்கள்
நாடகத்தமிழிலும் நல்லிசை சேரும்
நற்றமிழ் புலமை தமிழசையில் பாரும்

குறளோடு குரல் கொண்டு வந்தாரே வள்ளுவர்-
முத்து
பரலோடு பாடிப் பத்தினியை இளங்கோ சொன்னவர்
ஒன்றரை அடிகளில் குறளிசை பிறந்தது
என்தரை வரையில் தமிழிசை எழுந்தது

ஆசிரியர்- திரு.இக.கிருஸ்ணமூர்த்தி

## கற்றாளை

நீரருகே நிலிலேன்
நிலமதிர வேரூன்றேன்
நிற்பேன் பெரு வெளியில்
கேட்பேன் அவப்பெயரை — என்ற
பழமொழி பொய்த்து
அதிசயிக்கும் அருமருந்தாய்
அரண்களில் அலுவலகங்களில்
அலங்காரச் செடியாய்
நிமிர்ந்தாய் கண்டேன்.
வீதி ஓரத்தில்
ஒதுக்குப் புறத்தில்
ஒதுக்கியிருந்தோம்
ஆனாலும் மிடுக்கோடு இங்கே
நிமிர்ந்தெம்மைக் கவர்ந்தாய்
நோய் தீர்க்கும் மூலிகையாய்
முள்ளிருந்தும் மெருகானாய்
உலகத்தார் உன்னை
உயர்ந்து போற்ற
நாமும் அது கண்டு
பணம் கொடுத்துக் கையேந்தி
பத்திரமாய்ப் பாதுகாத்து
பகலிரவாய் கண்நோக்கி
மகிழும் நிலைபெற்றாய்.

--வ.மனோகரன்--

## கனவிலும் நான் கவிஞனடி

காதோரம் நீ வந்து செல்கையிலே
கனவிலும் காத்தேனடி உன்
கால்கள் பதிய - நான்
கள்வனென -நீ
உன் கவசம் எடுக்கையில்
என் திவசம் நடந்ததடி
என்னுயிர் பறந்தாலும்
ஏழ்மையிலும் நான் வீழ்ந்தாலும்
என்காதல் வீழயேயில்லை
அதிலெந்த கேள்வியும் இல்லை.

-ஜெயக்குமார் வினோத்குமார்-

## வானமே

உறங்கும் பனியால் உறைந்தன விரல்கள்
இறங்கம் நீரால் எடுத்தது இருமல்
கொடிய மழையோ சுுதல் கொடுத்தது
அடியேன் மனமோ ஆடிக் கிடந்தது
கார்பனி விரைந்து கடந்தால் - அழகு
பார் இனி சுகிர்க்கும் படர்தலப் பொலிவை
சோலையாய் நெஞ்சும் சுடர்மணம் காணும்
காலமே வந்து கருணை தருகவே
வானமே! வாழ்வின் வசந்தமே இன்பக்
கானமே பாடக் களிப்பினை அருள்கவே.

-தணிகை மணி-

## காதல் கல்யாணம்

பாக்கு வெற்றிலை மாற்றியதும் பழைய நினைப்பு
என் கண் முன்னே வந்து காதலை சொல்லி
கவிதை பாடுதடி.
மாற்று மாலைக்கு ஏங்கிய தோள்கள் இன்று
உந்தன் மார்புடன் சாய்கையில் தோன்றிய எந்தன்
ஜென்மம் இனிக்குதடா
உன்னை அறிந்து என்னை தந்தேன்
உன் உள்ளம் அறிந்து மாலை கொண்டேன்
அன்பே உந்தன் அன்பில் எந்தன்
நெஞ்சம் அன்று சேர்ந்தது
இந்நாள் அது பொன் நாள் என்று
நெஞ்சம் ரெண்டும் மஞ்சத்தில் சேர......
நெற்றிப்பொட்டில் குங்குமமும்
மெட்டியொலி சங்கீதமும்
எந்தன் வாழ்வில் நிலைத்திட
என்றும் நீ எனை தாங்கிட
பொத்தி வச்ச வெட்கத்தில
பூவுலக சொர்க்கதில
தாலி கழுத்தில் ஏறிட
என் தாரம் என்று நீ மாறிட
உலகமே கூடி ஒரு வாழ்த்து சொல்ல
கனிந்தது நம் காதல் அழகாக மெல்ல
நம் கல்யாணத்தில் காதலை
கண்களினாலே காண்கிறேன்



--நிசாந்தன்-






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச்சாரல்கள்

## தமிழின் அழகு அணிகலன்கள்.

தமிழைத் தாய் என்றோம், தாய்மைத் தமிழ் என்றோம்
அமிர்தை அள்ளுதல்போல் அள்ளி அணைக்கின்றோம்

தாயை இரசிக்கலாமோ அள்ளி சுவைக்கலாமோ
சேயை போன்றவுள்ளம் சேர்ந்து கொள்ளுமன்றோ.

தமிழவள் தாயுமல்ல, தயைமிகு தங்கையல்ல
தமிழர்கள் இரசிப்பதனால் தாரமென்றேன் தமிழா

சிலம்புடைத்து சீறியெழுந்த கண்ணகியும்
நிலம்புடைத்து நீறுபூத்த மதுரையையும்
சிலம்பணிந்த தமிழ்த்தாயில் சீர்கண்டோம்- காவிய
மனம்புடைத்த மகிழ்வில் கோவில் கொண்டோம்

காதுகளின் தொங்கியது குண்டலகேசி- சூது
வாதுகளின்றி பௌத்தகுரு நந்தகேசி
நாதகுப்தனார் மருவி நாதகுந்தரானார்
சாதுகுப்தனார் சிறந்து தமிழாயே போனார்.

சீழ்தலைச்சாத்தனார் சிரசில் சீழ்வடியத்தந்தகலை
ஊழ்தலை உறுத்தும் உயர்கலை மணிமேகலை
மேகலை என்பதே மேன்மை மிகு ஒட்டியாணம்
எம்கலை மலையென்றே எழுந்ததைக் கட்டியாளும்

சமணம் சமர்ப்பித்த சாத்வீக வளையல் வளையாபதி
தமிழ்மனம் திறந்த படைத்தவன் தெரியாத தமிழ்பதி
சோழர் ஆள திருக்தக்க தேவர் தந்தது சமணமணி
தமிழர் வாழ தமிழ்கொண்ட மணியே சீவகசிந்தாமணி

ஆயகலைகள் அறுத்திநான்கையும் தூயதமிழில் கொண்ட மொழி
நேயமெனவே நிமிர்ந்து நிற்கும் வாய்மை நிறைந்த செம்மொழி
ஆழிசூழ் அகிலத்தை ஏழிசையில் ஆண்டமொழி
வாழிநீ வையத்தில் வாழ்வாங்கு வாழியவே.

நோர்வே நக்கீரன்

## வலியும் வழியும்......

வலிகளைத் தாங்கும் கற்கள்தான் தொழும் சிலைகள்
உருளைகளின் உதைப்பை உள்வாங்கியே
அழகிய நெடுஞ்சாலைகள்.
முள்களை விலக்கிப் பார்த்தால் தான்
சூடும் பூமாலைகள்.
நூல்களைக் கண்விழித்துப் படிப்பதால்தான்
படியும் மூளைகள்
வெந்து விழுந்த வேங்கைகளின் கல்லறைக் காட்டில்
இனிதாய் மேயும் வெள்ளாடு
கங்கைகளின் நெஞ்சணைகளிலும் மிதக்கும்
பிணக்காடு
மங்கையின் வாழ்வுக்குத் தடைபோடும்
சீதனச் சிறைக்கூடு
தங்கைகளின் எதிர்காலத்திற்காய்
அண்ணன் படும்பாடு
ஆழி அடியில் அமிழ்ந்து பிறக்கிறது
சிப்பிக்குள் முத்து
கோடி றோசா கசங்கித்தான்
சுகமான அத்தர்
தாயை விடுதியில் தொலைத்தவன் மனப்பித்து
அவனுக்கும் அதுதான் தீர்வு
எங்கும் வியாபித்து
விருட்சங்களில் பழம் உண்ணும் பறவைகளுக்கும்
பூப் புகுந்து தேன் எடுக்கும் வண்டுகளுக்கும்
பாறைகளைப் பிளந்த வேர்களின்
வேதனை தெரிவதில்லை
தெரியாவிட்டால் என்ன பறவைகளும் விலங்களும்
எச்சங்களையல்லவா விட்டு விடுகிறது.
ஊருக்குச் சோறிடும் உத்தம தொழிலாளி
உண்பதில்லை
பட்டை நெய்பவன் பெரும்பாலும் அதை
அணிவதில்லை
பட்டைத் தந்துவிட்டுப்போகும் பட்டுப்பூச்சி
கோவில் கட்டாதவன் கையில்தான்
கடவுளின் ஆட்சி
பார்முழுதும் பேர் சிறக்கப் பல போர்கள்
உயிர்விட்டவர்கள் தொகையோ பலகோடி என ஆவர்
யானைகளும் குதிரைகளும் போர்படையின்
வேர்கள்
வீழ்ந்து போன இவைகளுக்காய் இல்லையே
வரலாற்றுப் பேர்கள்

-ப.பசுபதிராஜா-

போதை....
யாரோ ஒருவருக்கு உண்மையாக இருக்கின்றோம், என்ற உணர்வு தான் காதலில் மிகப் பெரிய போதை.

முதல் பார்வை....
கடைக்கண்ணால் பார்த்தாலே ஒரு வாரத்திற்கு
தூங்க மாட்டேன்,
கண்ணை சிமிட்டி பார்த்தால் என்னவாகுமோ !

-கீர்த்தன்-









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவரை இழந்தவள் வெட்டப்பட்ட மரம் போன்றவள் ஆனால் அம் மரம் பட்டு போகவில்லை.....

திருமணத்துக்கு முன்னும் பின்னும் பெண்களுக்கு பல்வேறு பிரச்சனைகள் ஏற்ப்படுகின்றன. இதற்கு காரணம் அவர்கள் வாழும் சமுதாயத்தின் மரபும் சூழலுமாகும். இவ் இரு காரணங்களால்தான் விதவை நிலையும் பரத்தமையும் நாட்டின் பிரச்சனைகளுள் தீர்க்கவியலாதனவாக நிலவுகின்றன. கணவனை இழந்த பெண்ணுக்கு சமுதாயம் வலியுறுத்தும் வேறு பட்ட வாழ்வே வாழ்கை நெறியாக அமைந்து விடுகிறது. இவள் மங்கலமான வாழ்வை மட்டுமே இழக்கிறாள். ஆனால் கடந்த கால இனிமையான வாழ்வை இழக்காது தவிக்கிறாள். உரிமை வேட்கையுடைய சமுதாயத்தில் மெல்ல மெல்லவாவது விதவையின் வாழ்வும் மலரத் தொடங்க வேண்டும்.

ஒருத்திக்கு ஒருத்தன் என்னும் உயரிய குறிக்கோளை இளமை காலங்களில் பெண்களின் மனதில் பதியுமாறு முன்னோர் கற்ப்பித்தனர்.. கணவன் இறந்தால் தூய வெண்ணிற ஆடையினை அணிதலும் பூ பொட்டு அணிகலன்களை அணியாது தவிர்த்தலும் தலை முடியினை மழித்து விடுதலும் உணவு முறையில் மாறுதல் ஏற்ப்படுத்தி கொள்ளதலும் அன்றைய சமுதாயத்தில் விதவைக்கு வழக்கமாக இருந்தது.

விதவை வாழ்வுக்குரிய காரணம் விதியின் பெயராலும் மரவு வழி வந்த சடங்குகளாலும் நிலவும் கொடுமை எனப்படுகின்றது. இவர்களின் வாழ்க்கை துயரம் நிறைந்துள்ளது "விதியை ஏற்றி வந்த பல்லவனும் சம்பிரதாயங்களை ஏற்றி வந்த குதிரை வண்டியும் முட்டி மோதி கொண்டதில் தாலிப்பாலம் தகர்ந்து விட்டது வாழ்க்கைச் சந்தையில் பூ வாங்க போய் நார் கூட வாங்க முடியாமல் துயர ஊர் திரும்பிய துர்ப்பாக்கிய சாலிகள்" என்றாகி விட்டது இவர்களின் வாழ்கை விதியின் மேல் கொண்ட சம்பிரதாய மரபு போன்றவையால் தான் விதவையர் வாழ்வில் துயரம் மேலோங்கியுள்ளது என்று கூறலாம்.

இவர்கள் வாழ்வில் எத்தகைய துயர நிலை நிலவுகிறது என்பதினை புதுக்கவிஞர்கள் பலரும் பாடியுள்ளார்கள். அன்றைக்கு பிருந்தாவனத்தில் ஆயிரக்கணக்கான கோபியர்கள் கண்ணணோடு மகிழ்சியாக இருந்த அந்த நிலை முற்றிலும் மாறி ஏழை விதவையர் அடுத்த வேளை உணவை எண்ணி ஆதரவற்றவர்களாக அனாதைகளாக ஆசிரமங்களில் சரண்புகுகின்றனர். பக்தியை மறந்து வயிற்றுப் பிழைப்புக்காக பயனை செய்கிறார்கள் என்கிறார். இரா.கதைப்பித்தன். வெள்ளாடை தரித்து மனதில் உள்ள ஆசைகளையும் விரட்டிய இவ்விதவை நட்சத்திரங்களுக்கு இரவு இல்லால் போய்விட்டது. இவர்கள் வாழ்வில் வசந்தத்தை இனி எதிர்நோக்க முடியாத பட்ட மரங்கள். கூவ முடியாத குயில்கள் மற்றவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கம் கோபம் என்பதனை வெளிப்படுத்த தெரியாதவர்கள். தங்கள் ஆடையின் மூலமாகவே விதவைகள் என்பதனை சொல்லாமல் சொல்லி கொள்வார்கள்.

இவர்கள் வாழ்வின் வெறுமையிலேயே முடிப்பார்கள். கணவன் வாழ்ந்த காலத்தைப் போலவே மடிந்த பிறகும். அவன் நினைவாகவே வாழ வேண்டும் என்பது மரபான கருத்து.

கடந்த காலத்தில் மஞ்சளில் குளித்து மஞ்சத்தில் மகிழ்ந்து போன்ற பல்வேறு இன்ப நிகழ்சிகள் இப்போது முடிந்து விட்டது. இவர்கள் சமுதாயமெனும் வீணையில் அறுபட்ட நரம்புகள். மங்களகரமான பொட்டடினை இழந்தவர்கள். உயிரெழுத்து போன்ற தலைவனை இழந்து விட்ட மெய் எழுத்து போன்றவர்கள். புகை வண்டிக்கு பொறி (இங்சின்) எவ்வாறு இன்றியமையாததோ அதுபோல ஒரு பெண்ணின் வாழ்க்கையில் கணவன் முக்கியமானவன் . விதவையர் அத்தகைய பொறியினை இழந்த விட்ட இணைப்புபெட்டிகள். கணவனை இழந்து விட்ட சோக இழப்பினால் நைந்துருகும்



நெஞ்சினர். முகவரியினை காணாமல் தொலைத்துவிட்டு முனகுகின்ற மடல்கள் குவிந்திருக்கும் கொடி மரத்தை ஒத்தவர்கள். இருள் வாழ்விலேயே வாழ்வை நடத்தும் வெள்ளாடை வெளிச்சங்கள் . பெண் இள வயதிலே விதவையானால் அது துன்பம் மிக்க கொடுமையானதாகும். இவள் வாழ்ந்து பெறாத இன்பத்தை எண்ணி எண்ணி ஏங்கி கண்ணீர் வடிப்பாள். ஆசைகளை இதய தீயில் நாழும் எரிப்பாள். அவள் பருவ மழையில் அழிந்து விட்ட பயிர். பாட முடியாத ஊமைக்குயில். இனியாரும் படிக்கவியலாத பாடநூல் என பலவேறு முகாரிகள் சமுதாயத்தில் மீட்டப்பட்டுகொண்டிருக்கிறது. கவிஞர்கள் பெண்ணை பூவிற்கு ஒப்பிடவது வழக்கம். அனைத்து பூக்களையும் ஒன்றாக கருதாமல் விதவை பூ என்று ஒன்று இல்லாது இருப்பதை உணராதது ஏனோ....

சமுதாயத்தில் தாலி இழந்த விதவை பூக்களுக்கு சோகமே துணையாக அமைந்து விடுகின்றது. விதவைச் சமுதாயம் "தாலி அறுத்தவள்" என ஒதுக்கி வைத்திருப்பதனை இன்றைய நடமுறை வாழ்க்கையிலும் காணலாம். எந்த விதமான மங்கள நிகழ்ச்சிகழுக்கும் அவளின் தலையீடு இல்லாமலே இருக்கும். அவளுடைய இல்லத்தில் நடைபெறும் அத்தகு நிகழ்ச்சிகளிலும் அவள் கலந்து கொள்ள அனுமதிப்பதில்லை நற்க்காரியங்களுக்கு செல்கையில் எதிரே வந்தால் தீ நிமித்தமாக கருதப்படுவாள். கணவனை இழந்த ஒருத்தி தொடர்ந்து அழுவதும் தாலி அறுக்கும் சமயத்தில் மகளிர் அவளது பொட்டினை அழிப்பதும் கைவளயல்களை. நெருக்குவதும் வழக்கம். அத்தோடு சேர்ந்து அவள் புறக்கணிக்கப்படுதலும் உரிமைகள் மறுக்கப்படுவதும் தொடர ஆரம்பிக்கிறது. இதற்கு பெண்கள் மனதளவில் மாறிவிட்டால் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலம் உருவாகும்..

விதவை என்பவள் வெட்டப்பட்ட மரம் போன்றவள் ஆனால் அம் மரம் பட்டு போகவில்லை... எனவே அம் மரம் மீண்டும் தழைப்பதற்கு வழி உண்டு. வெள்ளை உடை என்பது ஒருவரின் தூய்மையை குறிப்பதாகும். துயரத்தின் அடையாள சின்னமன்று. எனவே வெள்ளை உடையில் உள்ள பெண் மக்களை வண்ண உடையில் குடியமர்த்தலாம். ஒரு மறு மலர்சி உருவாகி அதன் வழி விதவையர் வாழ்வில் ஒரு நற்காலம் உருவாக வேண்டும். அத்தகைய மறுமலர்சி காலம் வரும் வரை அவர்கள் நெற்றியில் பொட்டினை காணமுடியாது."ஒரு புரட்சி திரு நாளில் ஓடும் குருதியில் இருந்து குங்குமம் திரட்டிக்கொண்டு வந்து விதவை நெற்றியில் வெற்றி திலகம் இடும் வரை நான் அழிக்கப்பட்ட திலகம்தான் ஆனால் என் அடிச்சுவடகள் அழிவதில்லை" என்ற செல்வ கணபதியின் கவிதை திறம்பட சொல்கிறது.

இன்று பெரும்பாலும் வாலிபர்கள் திருமணமாகாத மங்கையர்களையே மணம் முடிக்க நினைக்கிறார்கள் அவ்வாறு இருக்கையில் விதவையை மணந்து வாழ்வழிப்பது என்பது இயலாத காரியம் என்ற கருத்தினை "கன்னியின் மடியிலேயே கைவைக்கும் கரங்களா... வெள்ளை நெற்றிக்கு வெள்ளிச் சிமிழ் திறப்போம்" என்று மதுமாலிகா அழகாக சொல்லியுள்ளார். எனவே இம்மன நிலையை உவந்து மாற்றிக்கொண்டு விதவையர்கும் வாழ்வு தரும் வலிமையை இளைஞர்கள் பெருக்கிக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை நூல்களாக மட்டும் தொகுக்கப்படாமல் நிஜமான தாலிகயிறாகவும் மாற வேண்டும்.

-நெடுந்தீவு முகிலன்-







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்முகி புத்தாண்டு ராசிபலன்கள்

மேசம்

கடல் அலை ஓயாததைப்போல வாழ்க்கை என்றால் பிரச்னைகளும் இருக்கும் என்பதை உணர்ந்த நீங்கள் எச்சரிக்கை உணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் ராசிநாதனான செவ்வாய் உங்கள் ராசிக்கு 8ம் வீட்டில் வலுவாக ஆட்சிபெற்று அமர்ந்திருப்பதால் தைரியம் பிறக்கும். தடைபட்ட காரியங்களெல்லாம் நல்ல விதத்தில் முடிவடையும்.

உங்களின் தனாதிபதியான சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்கிறது. அட்மத்துச் சனி தொடர்வதால் அவ்வப்போது சோர்வு, களைப்பு அடைவீர்கள். முன்கோபத்தால் சிலரின் நட்பை இழந்து விடாதீர்கள். கேது லாப வீட்டில் தொடர்வதால் லாபம் தரும்.
இராசியான திகதிகள்: 1, 2, 8, 9, 10, 11.

ரிசபம்

எப்போதும் வாழ்வில் எதிர்நீச்சல் போடும் நீங்கள், வறுமையைக் கண்டு பயப்பட மாட்டீர்கள். யாராக இருந்தாலும் நியாயத்தைப் பேசும் நீங்கள், பழிபாவத்திற்கு அஞ்சுவீர்கள்.

இராசிநாதன் சுக்கிரனும், தன-பூர்வ புண்யாதிபதி புதனும் சாதகமான வீடுகளில் செல்வதால் போராட்டங்களை சளைக்காமல் எதிர்கொண்டு சமாளிக்கும் சக்தி கிடைக்கும். இங்கிதமாக, இதமாகப் பேசி எல்லோரையும் கவருவீர்கள்.

உங்களின் சப்தமாதிபதியான செவ்வாய் 7ம் வீட்டிலேயே ஆட்சிபெறுகிறது ஆனால், 7ம் இடத்திலேயே சனியும் நீடிக்கிறது. ராகு, கேது மற்றும் குரு உங்களுக்கு சாதகமாக இல்லாததால் சுமை அதிகரித்துக் கொண்டேயிருக்கும்.

உங்களின் சுகாதிபதியான சூரியன் உச்சம் பெற்று காணப்படுவதால் அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடிவடையும். ஆனால், 12ம் வீட்டில் மறைந்திருக்கிறது.

இராசியான திகதிகள்: 2, 3, 4, 5, 10, 12, 13.

மிதுனம்.

சிறுவயதிலேயே சீர்திருத்த சிந்தனையயுடைய நீங்கள், அடிமைத்தனத்தையும், மூடப்போக்கையும் எதிர்த்து குரல் கொடுப்பீர்கள். ராகு வலுவாக 3ம் வீட்டிலேயே நிற்பதால் உங்களின் புகழ், கௌரவம் ஒருபடி உயரும். வி.ஐ.பிகளும் அறிமுகமாவார்கள்.

6ல் சனிபகவான் தொடர்கிறது. உங்களின் பூர்வ புண்யாதிபதியான சுக்கிரனும், ராசிநாதன் புதனும் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால் குழந்தை பாக்கியம் உண்டு.

உங்கள் லாபாதிபதியான செவ்வாய் 6ம் வீட்டிலேயே ஆட்சி பெற்று அமர்ந்திருப்பதால் வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள்.
ராசியான திகதிகள்: 4, 5, 6, 8, 13.

கடகம்

தானுண்டு தன் குடும்பமுண்டு என்று தன்னலத்துடன் வாழாமல், ஊர் வளர்ச்சியிலும் அக்கறை காட்டும் நீங்கள், அநீதியை தட்டிக்கேட்க தயங்க மாட்டீர்கள்.

கடந்த ஒரு மாத காலமாக 9ம் வீட்டில் அமர்ந்த சூரியன் இப்போது 10ம் வீட்டில் வந்தமர்ந்திருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும்.




சுக்கிரன் சாதகமான நட்சத்திரங்களில் செல்கிறது.
ராசியான திகதிகள்: 6, 8, 10, 11.

சிம்மம்

அடக்குமுறையைக் கண்டு அஞ்சாமல் நியாயத்திற்காக போராடும் நீங்கள், யாருக்காகவும் கொண்ட கொள்கை, குறிக்கோள்களிலிருந்து பின்வாங்கமாட்டீர்கள்.

உங்களின் யோகாதிபதி செவ்வாய் பகவான் 4ம் வீட்டில் ஆட்சி பெற்று அமர்ந்திருப்பதால் பணத் தட்டுப்பாட்டை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் பேச்சிலே அனுபவ அறிவு வெளிப்படும். பழைய பிரச்சினையிலிருந்து விடுபடுவீர்கள். சுக்கிரனும் சாதகமான நட்சத்திரங்களில் செல்கிறது.

ராசியான தேதிகள்: 1, 2, 8, 9, 10, 11.

கன்னி

எதிரிக்கும் நல்லதே நினைக்கும் மனசு படைத்த நீங்கள், எப்போதும் ஒற்றுமை உணர்வுக்கு உரம் அளிப்பவர்கள்.
செவ்வாயும், சனியும் 3ம் வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் மகிழ்ச்சி உண்டாகும். தன்னம்பிக்கையும் பிறக்கும். சூரியன் இந்த மாதம் முழுக்க 8ம் வீட்டில் அமர்ந்திருப்பதுடன் 12ம் இடத்திலேயே ராகுவும், குருவும் தொடர்வதால் அடுக்கடுக்காக செலவுகள் இருக்கும்.

பணப்பற்றாக்குறை ஏற்படும். கைமாற்றாக கொஞ்சம் கடனும் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.6ல் கேது தொடர்ந்து கொண்டிருப்பது லாபம் தரும். குறுகிய வட்டத்திலிருந்து விடுபட்டு வெற்றி பாதையை கண்டறியும் மாதமிது.

ராசியான தேதிகள்: 4, 10, 11, 12, 13.

துலாம்

எதிலும் நியாயம், நேர்மை, நீதி, வாக்கு தவறாமை, எல்லா செயல்களிலும் சீராக நடக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அன்பர்களே! நீங்கள் உங்கள் பேச்சால் சாதுரியம் செய்வீர்கள். நீங்கள் பிறர் சொல்லில் பொருள் ஆய்ந்து அதற்கு தக்கபடி பதில் அளிப்பதால் உங்கள் வார்த்தைக்கு மதிப்பும் மரியாதையும் கூடும்

உங்கள் ஜென்ம ராசிக்கு மூன்று, ஆறுக்குடைய குரு பகவான் தன்னம்பிக்கையை கூடுதலாக வளர்க்கும். இவ்வாண்டு உங்களின் செயல் காரியங்களை நிறைவேற்ற பாடுபடும் நடந்தவை யாவும் நன்மைக்குத்தான் என்ற பட்டறிவு உங்களைப் பதப்படுத்தியதால் யோகங்கள் அதிகரிக்கும் சோகங்கள் மறையும்.
சனிக்கிழமை தோறும் ஸ்ரீவிஷ்னு சகஸ்ரநாம பாராயணம் செய்யவும்.

ராசியான தேதிகள்: 5, 8, 11, 14,

தொடர்ச்சி- 22 ம்பக்கத்தில்----







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜேர்மன் மொழி தெரியாவிட்டால், குடியிருப்பு அனுமதி கிடையாது!

ஜேர்மனியில் குடியேறியுள்ள அகதிகள் ஜேர்மன் மொழியை கற்றுக் கொண்டு அந்நாட்டு குடிமக்களுடன் ஒருங்கிணைந்து செயல்படாவிட்டால் நிரந்திர குடியிருப்பு அனுமதியை ரத்து செய்யும் புதிய சட்டம் வரவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க்கலின் அம்மையார் அவர்களின் அகதிகளுக்கான தாராள கொள்கைகள் அந்நாட்டு பொதுமக்களிடையே பலத்த எதிர்ப்பை சந்தித்து வருகிறது. அத்துடன் மார்ச் மாதம் நடைபெற்ற உள்மாகாண தேர்தலிலும் அதிபர் ஏஞ்சலா மெர்க்கலின் அம்மையாரின் கட்சி தோல்வியைச் சந்தித்துள்ளது.



இந்நிலையில், அதிபர் ஏஞ்சலா மெர்க்கலின் அம்மையாரின் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரும் ஜேர்மனி உள்துறை அமைச்சருமான Thomas de Maiziere ஒரு புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதில் ஜேர்மனியில் புகலிடம் கோரி வருபவர்கள் கட்டாயம் ஜேர்மன் மொழியை கற்றுக்கொண்டு, சமுதாயத்துடன் இணக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும், தங்களுடைய உறவினர்களையும் யேர்மனியக் குடிமக்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட ஒத்துழைக்க வேண்டும். ஜேர்மன் அரசு ஏற்பாடு செய்யும், அல்லது அகதிகளுக்கு வரும் வேலைவாய்ப்புகளை அவர்கள் கட்டாயம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிவித்தல்களை அகதிகள் பின்பற்றாவிட்டால், 3 ஆண்டுகளுக்கு பிறகு அவர்களுக்கு நிரந்தர குடியிருப்பு அனுமதி ரத்து செய்யப்படும் எனவும் இதற்கான ஒரு புதிய சட்டத்தை விரைவில் இயற்ற உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் கடந்தாண்டு மட்டும் ஒரு மில்லியன் அகதிகளும் இந்தாண்டு தொடக்கம் முதல் ஒரு லட்சம் அகதிகளும் ஜேர்மனிக்குள் வந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் வெளியாகியுள்ளன.

- 21 ம் பக்கத் தொடர்ச்சி....

விருச்சிகம்

நியாயமாக தனக்குக் கிடைக்க வேண்டியதைக்கூட சில நேரங்களில் விட்டுக் கொடுக்கும் நீங்கள் மற்றவர்களின் மீது அதிக பாசம் வைப்பீர்கள்.

கடந்த ஒருமாத காலமாக உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் அமர்ந்து கொண்டு தூக்கமின்மையையும், பிள்ளைகளால் பிரச்சினைகளையும், அவர்களின் உயர்கல்வி, ஆரோக்கியம், திருமணம் இவற்றை யெல்லாம் நினைத்து பயத்தையும் தந்து கொண்டிருந்த சூரியன் இந்த மாதம் முழுக்க 6ம் வீட்டில் அமர்வதால் பரபரப்பாக காணப்படுவீர்கள்.

உங்கள் ராசிநாதன் செவ்வாய் ஆட்சி பெற்று அமர்ந்திருப்பதால் தைரியமாக பெரிய முடிவுகளை எடுப்பீர்கள். 26ந் தேதி முதல் சுக்கிரன் 6ம் வீட்டில் மறைகிறது. புதனும் 6ல் மறைந்திருப்பது உறவினர், நண்பர்களுடன் பகைமை வந்து போகும். ஜென்மச் சனி தொடர்வதால் வீண் விரயம், உணர்ச்சி வசப்படாமல் உள்மனசு சொல்வதை உள்வாங்கி செயல்படவேண்டிய மாதமிது.

ராசியான தேதிகள்: 6, 7, 8.

தனுசு

சண்டையை விரும்பாத நீங்கள் பெரிய மனிதர்களின் தவறுகளை, இரகசியங்களை அம்பலப் படுத்துவதில் வல்லவர்கள். என்றும் ஏழையின் கண்ணீரை துடைப்பவர்கள். புதன் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால் உங்களின் புத்திசாலித்தனம் வெளிப்படும். நட்பு வட்டம் விரியும்.

செவ்வாய் ஆட்சிபெற்று அமர்ந்திருப்பதாலும், சுக்கிரனும் சாதகமான வீடுகளில் சென்று கொண்டிருப்பதாலும் புதிய முயற்சிகள் பலிதமாகும். ஏழரைச் சனி தொடர்வதால் அவ்வப்போது பணப் பற்றாக்குறை ஏற்படும்.

நீண்ட கால எண்ணங்கள் நிறைவேறும் மாதமிது.

ராசியான தேதிகள்: 1, 2, 8, 9, 10.

மகரம்

போட்டியென வந்து விட்டால் புலியாக மாறும் நீங்கள், தொடங்கிய வேலையை முடிக்கும் வரை ஓய மாட்டீர்கள்.

உங்களின் பிரபல யோகாதிபதியான சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்வதால் உங்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.

சூரியன் 4ம் வீட்டில் நிற்கிறது. கேது இரண்டிலும், ராகு 8ம் இடத்திலும் தொடர்வதால் ஏமாற்றம், எதிலும் ஆர்வமின்மை, தோன்றும்.

விவேகமான முடிவுகளால் சாதித்துக் காட்டும் மாதமிது.

ராசியான தேதிகள்: 2, 3, 4, 5, 10, 11, 12,

கும்பம்

தெளிந்த நீரோடை போல தீர்க்கமாக முடிவெடுக்கும் நீங்கள் யார் மனதும் புண்படாதபடி நடந்து கொள்ள வேண்டும் என்பதில் கவனமாக இருப்பீர்கள்.

சூரியன் இந்த மாதம் முழுக்க 3ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் படபடப்பு குறையும். பக்குவமாகவும், இங்கிதமாகவும் பேசி எல்லோர் மனதிலும் இடம் பிடிப்பீர்கள்.

10ம் வீட்டில் செவ்வாய் நீடிப்பதால் துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

வீட்டில் நல்லது நடக்கும். போராட்டங்களை கடந்து புத்துயிர் பெறும் மாதமிது.

ராசியான தேதிகள்: 4, 5, 6, 7, 8, 12, 13.

மீனம்

